Regd. No. M. 4593. "KUDI ARASU" 12 பக்கங்கள்

# குடி அரசு

Estd. 1924

தனிப்பிரதி விலை ரூ. 0-1-6

வருட சந்தா ரூ. 5. சனி வெளியீடு.

மாலை 17 ஈரோடு, 26-8-1944 ஆவணி-மீ 11உ மலர் 46

## சினிமா கலை

(தோழர் எஸ். பழனிவேல்)

இன்று உலகத்தில் மக்களுடைய நாகரீகமும் அறிவு வளர்ச்சியும் வர, வர, அதிகரித்து வருவதற்கு சினிமா கலையும் ஒரு காரணமாயிருக்கலாம் என்பது என்னுடைய அபிப்பிராயம். மேனாட்டார்கள் அதிகமாக அறிவு வளர்ச்சி அடையக்கூடிய பல பகுதிகளை புகுத்தி பயன்படும்படி சினிமா படம் எடுக்கிறார்கள். அதனால் மக்கள் எல்லாத்துறைகளிலும் முன்னேற்றம் அடைந்து வருகிறார்கள். அங்கிருந்து நேராக வட இந்தியாவுக்கு வந்து அங்கு காட்டப்படும் படங்களைப் பார்த்தால் பெரும்பாலும் அன்றன்று நமது வாழ்க்கையில் நிகழும் சம்பவங்களையே தத்ரூபமாக படம் எடுத்துக் காட்டுகிறார்கள். அதனால் மக்கள் தமது வாழ்க்கையில் எவ்விதமாக நடந்து வந்தால் வாழ்க்கையில் இன்பம் பெறலாம், எவ்விதம் நடந்து வரவேண்டும் என்ற பாடம் கற்பிக்கப்படுகிறது. அங்கிருந்து தென் இந்தியாவிற்கு (தமிழ் நாட்டிற்கு) வந்தால் இங்கு காட்டப்படும் படங்கள் பெரும்பாலும் பகுத்தறிவுக்கு எட்டாத, பகுத்தறிவுக்கு முட்டுக்கட்டையான உலகத்தில் நிகழாத, கவிப்புலவர்கள் ஆங்காங்கு தோன்றி தனது கவிப் புலமையைக் காட்ட கற்பனை செய்து எழுதப்பட்ட கதைகளையும், ஒரு சமூகத்தார் பயன்பட, சுகமாக மக்களை வஞ்சித்து வாழ ஏதுவான பல கற்பனை செய்து எழுதப்பட்ட கதைகளை, புராணப் புழுகுகளைத்தான் படமாக காட்டுகிறார்கள் என்பதை நினைக்கும் பொழுதும், சினிமாக்கலையை எந்த நிலைமைக்குக் கொண்டு வந்து விட்டார்கள் என்பதைப் பார்க்கும் பொழுதும் நாம் (தமிழர்கள்) எவ்வளவு அபாக்கியசாலிகள் என்பது விளங்குகிறது. புராணப் படங்களைப் பார்க்கும் ஜனங்கள் என்ன தெரிந்து கொள்கிறார்கள். அதனால் என்ன அறிவு வளர்ச்சி அடைகிறது என்பதைப் பார்ப்போம்.

ஒரு பார்ப்பான பதர் ஒரு அரசனிடத்தில் வந்து பொருள் தானம் கேட்டு கொடுப்பதாக அரசன் ஒப்புக்கொண்டு விட்டால் பிற்பாடு அப்பார்ப்பனன் நீ பிச்சை கொடுப்பதாகச் சொன்ன பொருளை இப்பொழுது கொடு என்று சொல்லும் பொழுது அவ்வரசன் தனது ராஜ்யத்தையே சில காரணங்களை முன்னிட்டு அவனிடத்தில் ஒப்புவித்த பிற்பாடுகூட மீண்டும் கேட்டால் தன்னுடைய பெண்டாட்டி பிள்ளைகளை விற்று தானும் அடிமையாகியாவது அப்பார்ப்பானுக்கு தானம் கொடுக்க வேண்டும்; மீண்டும் என்ன கொடுமை செய்தாலும் பொறுத்துக்கொண்டு சுவாமி என்று அடி பணிய வேண்டும் என்ற கருத்துடைய சினிமாவை அடிக்கடி எடுத்து மக்களிடம் காட்டுகிறார்கள். இந்த படத்தில் என்ன அறிந்து கொள்ள முடியும், அடிமை புத்தியும் கோழைத் தனமும் தவிர பிறகு என்ன ஜனங்கள் அறிய முடியும். இந்த மாதிரி கதைகள் ஒரு சமூகத்தின் பயனுக்காக எழுதியிருக்கும் கற்பனை என்பதை யாராவது மறுக்க முடியுமா? இன்னும் இந்த மாதிரி படங்களில் என்ன அறிந்து கொள்ள முடியும், இப்படியெல்லாம் அடிமைப்படுத்தும் ஆரியர் சூழ்ச்சிக்கும் கட்டுப்பட்ட கோழைத்தனமுடைய ஒருவனுக்கு பின்னால் மோட்சம், சுக போகங்கள் அருளுவாராம் கடவுள். இன்னும் இம்மாதிரி புராணங்களைப் பார்ப்பதில் அறிவுக்கு பொருத்தமில்லாத கோரம் முளைத்தல், கடவுள் வைப்பாட்டியை வைத்துக்கொண்டு பிள்ளை பெறும் விந்தை, தெய்வ அம்சம்; பார்வதி, லெக்ஷிமி, இந்திராணி, அகலிகை முதலியவர்கள் பிற புருடனை இச்சித்தல், அதை புருஷன் தெரிந்து கொண்டால் பெண்களை கல்லாகவும், மிருகமாகவும் சபித்தல் முதலிய கருத்துக்கொண்ட படங்கள் காண்பித்தால் மக்கள் என்ன அறிந்து கொள்கிறார்கள். கடவுள் மக்களுடைய தன்மைக்குக் கீழ்ப்பட்ட, அறிவில்லாதவர் என்று மக்கள் அறிவதைத் தவிர வேறு என்ன அறிய முடியும். இன்னும் பெண்கள் ஆடவன் என்ன கொடுமை செய்தாலும் அதை சகித்துக் கொண்டு வாழாகிடத்தல், பெண்கள் அடிமை, அடுப்பூதி, பிள்ளை பெறும் யந்திரம் என்றும், பெண்களை ஆடவனுக்கு அடிமையாகவே ஆண்டவர் படைத்தார் என்ற கருத்துக்களையுடைய சினிமா படத்தை மக்களுக்கு காட்டுவதால் பெண்கள் நிலை முன்னேற்றமடைவது எப்பொழுது? நமது நாடு சுதந்திரம் அடையவேண்டுமானால், பெண்கள் அடிமையினின்றும் நீக்கப்படவேண்டும் என்பதின் அர்த்தந்தான் என்ன? இன்றும் பதிவிரதை என்று காட்டப்படும் விபசாரிகள் கதையை சினிமாத் துறையில் மக்கள் பார்த்தால் மக்களுக்கு என்ன அறிவு புலப்படும்? சிவனடியார் என்னும் சோம்பேறிக்கு தன் மனைவியை பக்தன் தானம் வழங்குவதும், கூட்டிக் கொடுப்பதுமான பக்தர்கள் கதையை மக்கள் பார்ப்பதால் எந்தவிதமான ஒழுக்கத்தை மக்கள் கடைபிடிக்க வழி ஏற்படுகிறது. இன்னும் எழுதிக்கொண்டே போனால் இடம் இடந்தராது என விரிவஞ்சி விடுத்தனம். இப்படி கேடுகெட்ட மான, அறிவை பாழ்படுத்துகிற கதைகளை படம் தயாரிக்கும் பட முதலாளிகள் டைரெக்டர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதைப் பார்த்தால் எல்லோரும் மேல்நாட்டு கல்வி பயின்ற பி. ஏ., எம். ஏ., பட்டதாரிகள்; நல்ல அறிவாளிகள், தேச முன்னேற்றத்திற்கு பாடுபடும் தேச பக்தர்கள், இவர்கள் தான். இவர்களைப் பார்த்து ஏன் இப்படிப்பட்ட படங்களை தயாரிக்கிறீர்கள் என்று அறிவாளிகள் கேட்டால் அவர்கள் சொல்லும் பதில் இதுதான், 'படம் பார்க்கும் மக்கள் பெரும்பாலும் பாமர மக்கள், கல்வி வாசனை அறியாதவர்கள், கேடுகெட்டவர்கள்' என்று சொல்லுகிறார்கள். இதிலிருந்து பட முதலாளிகள் டைரெக்டர்கள் தமிழ் மக்களை எப்படி கேடுகெட்டவர்களாக, மூட்டாள்களாக, அறிவில்லாதவர்களாக மதித்திருக்கிறார்கள் என்பதை ஒவ்வொரு தமிழ் உணர்ச்சியுள்ள தமிழ் மகனும் அறிந்து ரோசத்துடன், ஆண்மையுடன், 'ஏ படம் பிடிப்பாளர்களே தமிழ் மக்கள் விழித்துவிட்டார்கள், ஆரிய சூழ்ச்சியினின்றும் விடுபட்டு வருகிறார்கள். முன்னேற்றம் என்னும் பாதையில் சென்று கொண்டிருக்கிறார்கள். பகுத்தறிவை பாழ்படுத்துகிற பழைய குப்பைப் புராணப் படங்களை அறவெறுக்கும் அந்த சமயம் நெருங்குகிறது. மீறி எடுத்தால் போது மக்களுடைய ஆதரவுக்கு அறிவு தேடிக் கொள்வீர்கள்!' என்று முழங்குங்கள். தமிழ் இளைஞர்கள் புராணப்

# திராவிடஸ்தான் பிரச்சினை

## தோழர் ராமனாதன் வேண்டுகோள்

சென்னை: 17-8-44ம் தேதி மாஜி காங்கரஸ் மந்திரி தோழர் S. ராமனாதன் அவர்கள் இஞ்சினியரிங் கல்லூரி மாணவர் சங்கத்தை ஆரம்பித்து வைத்தார். அதுசமயம் அவர் திராவிடஸ்தான் பிரச்சினையைக்குறித்தும், பார்ப்பனர்-பார்ப்பனரல்லாதார் தகராறு, தமிழிசை இயக்கம் ஆகியவைகளைக் குறித்தும் பேசியதாவது:-

"ஒற்றுமையில் எனக்கு பக்தியுண்டு. ஒற்றுமையென்ற சொல் இளைஞர்களை வெகுதூரம் கவர்ந்திருக்கிறது. ஒற்றுமை ஐக்கியம் என்பது பொய்யானதாகவும் இருக்கலாம், மெய்யானதாகவும் இருக்கலாம். உண்மையிலே நாட்டிலுள்ள பெரும் பிளவுகளை மறைப்பதற்கு, மூடி மெழுகுவதற்கு இச்சொல் உபயோகப்படுத்தலாம்.

ஒற்றுமையென்றோ, பாரதமாதாவுக்கு ஜே என்றோ, நாட்டைப் பிரிக்கக் கூடாதென்றோ கூச்சல் போடுவதில் அர்த்தமேயில்லை. உண்மையாகவே இந்தியா ஐக்கியப்பட்டிருந்தால், உலகில் எந்த சக்தியும் இதை பிரிக்கமுடியாது. எனவே, கிளிப்பிள்ளை மாதிரி "ஹிந்து முஸ்லிமுக்கி ஜே" என்று கூச்சல் போடுவதினால் ஒன்றும் பயனில்லை.

இம்மாதிரி கூச்சல் கடந்த 25 வருடங்களாக நாம் போட்டு பார்த்தாய் விட்டது. கண்ட பலன் என்ன? பிளவு அதிகரிக்கலாச்சு என்பதைத் தானே இன்று நாம் காண்கிறோம்.

தென்னிந்தியாவிலோ வட இந்தியாவிலோ, உள்ள வகுப்புப் பிரச்சினையை தீர்க்க நான் வெளியிட்ட யோசனையை சிலர் கண்டிக்கிறதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். எனவே நான் ஒளிவு மறைவின்றி சொல்லுகிறேன், கேளுங்கள். நீங்கள் விஞ்ஞான அறிவுடையோர்கள். ஆகவே, நான் சொல்வதை உங்கள் பகுத்தறிவு கொண்டு சிந்தித்துப் பாருங்கள்.

இந்நாட்டில் ஹிந்து-முஸ்லிம் தகராறு மட்டும் தீர்ந்துவிட்டால் வகுப்புப் பிரச்சினையெல்லாம் தீர்ந்துவிட்டதாக கருத முடியாது. இந்நாட்டிலுள்ள அரசியல் அரங்கமே வகுப்புப் பிரச்சினையால் சூழ்ந்திருக்கிறது. வடநாட்டில் இருந்து வருவது போலவே தென்னாட்டிலும் இப்பிரச்சினை இருந்து வருகிறது. வடநாட்டில் மதத்தகராறு, தென்னாட்டில், வகுப்பு அல்லது ஜாதித் தகராறு.

பிராமணர்—பிராமணரல்லாதார் தகராறு சமீபத்தில் தோன்றியது என்று சொல்லலாம். ஆனால், ஆராய்ந்து பார்த்தால் பல நூற்றாண்டுகளாகவே இருந்து வந்திருக்கிறது என்பதை மறைக்கமுடியாது. அரசியல் உலகிலே இப்பிரச்சினை தோன்றியிருப்பது சமீப காலத்தில் தான். இது கட்டுக்கதையல்ல.

இத்தென்னாட்டில் அமைப்போடு கூடிய ஒரு கட்சியிருந்து வருகிறது. அக்கட்சி ஆட்சி செலுத்தி வந்திருக்கிறது. இப்பொழுது மீண்டும் புத்துயிர் பெற்று வருகிறது. ஏன்? ஹிந்து-முஸ்லிம் போன்ற பெரும் பிரச்சினைகள் தீர்க்கப்படும் இந்த தருணத்தில், தங்களுடைய பிரச்சினையை உலகறியச் செய்யாவிட்டால், இப்பிரச்சினை மறைக்கப்பட்டுவிடும் என்பதினாலேயாகும். ஆகவே தான் இம்மாகாணத்தில் ஆங்காங்கு கிளர்ச்சி நடைபெற்று வருகிறது. சுதந்திரத்திலும், இந்திய சுயேச்சையிலும் எனக்கிருக்கும் ஆசையினால், சொல்லுகிறேன், இப்பிரச்சினையை விருப்பு வெறுப்பில்லாமல் அலசி பார்க்கும்படி. அநீதியிழைக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்கவேண்டுவது நீதிதானே, இதில் என் தயக்கம், வெட்கம்.

திராவிடஸ்தான் கோரிக்கையையும் சற்று சிந்தித்துப்பாருங்கள். திராவிடஸ்தான் என்றால் வடநாட்டின் ஆதிக்கத்தில் இருந்து பிரிந்து வாழவேண்டும் என்பதுதான். இந்நாட்டு மக்களின் வாழ்க்கையைப் பாதிக்கும் முறையில் பொருளாதார நிலைமை இருந்து வருகிறது. பொருளாதாரத்துறையில் வடநாட்டு ஆதிக்கம் இருந்து வருகிறது. இம்மாதிரியான நிலைமை மாறுவதற்கு வடநாட்டிலிருந்து தென்னாடு பிரிந்து வாழவேண்டும். எனவே, திராவிடஸ்தான் கோரிக்கைக்கு ஆதரவு அதிகரித்து வருகிறது. அதுமட்டுமல்ல, 100க்கு 2 சதவிகிதமுள்ள ஒரு சிறு கூட்டம், உத்தியோகங்களையும் கற்றோர் தொழில்களையும், ஏகபோகமாக அனுபவித்து வருவதைக் கண்டு பிராமணரல்லாதார் மனம் வெதும்புகிறது. இதனால் தென்னாட்டுச் செல்வம் கொள்ளை போகிறது. திராவிடஸ்தான் பிரிவினை கோரிக்கையையும் மொழிவாரியாகபிரிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையையும் ஒன்றாகச் சேர்த்துக் குழப்பாதீர்கள்.

தமிழ்நாடு தமிழர்களுக்கே என்றும் ஒரு கோரிக்கையிருந்து வருகிறது. ஆந்திராநாடு ஆந்திரர்களுக்கே என்றும் கோரப்படுகிறது. எதிர்காலத்தைக் குறித்து ஒரு முடிவு செய்யப்போகும் போது, இவைகளை எல்லாம் புறக்கணித்துவிட முடியாது.

தெலுங்கு பேசும் ஜில்லாக்களிலுள்ள மக்கள் பிரிந்து போக விரும்பினால் பிரிந்து போகட்டும். அதனால் தமிழ் பேசும் ஜில்லாக்களிலுள்ளவர்களுக்கு ஒன்றும் பாதகமில்லை. இங்கு கவனிக்க வேண்டியது ஒன்றே ஒன்றுதான், அதாவது, தெலுங்கு நாட்டில் தமிழர்கள் இருப்பதால் செல்வத்தை சுரண்டிக் கொண்டு போய்விடுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. இது நியாயம் என்று தோன்றுகிறவர்களுக்கு தமிழ் நாட்டில், ஒரு சிறு கூட்டத்தார் ஏகபோகமாக சுரண்டிக்கொண்டு வருவதை எதிர்த்து கிளர்ச்சி செய்வதோ சொல்லுவதோ ஏன் நியாயமாகத் தோன்றவில்லை? ஒரே தத்துவத்தின் மீது தான் இக்கோரிக்கைகள் இம்மாகாணத்தில் வெளியிடப்பட்டு வருகின்றன என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும்.

பாதிக்கப்பட்டவர்கள் கோரும் கோரிக்கைகளை பொறுமையுடன் கேட்டு பரிகாரம் தேடுவது தான் நேர்மையாகும். இதுதான் நான் விரும்புவது. இப்படிச் சொல்லுவதினால் திராவிடஸ்தானுக்காகவோ அல்லது வேறு எதற்காகவோ நான்பரிந்து பேசுவதாககருதக் கூடாது. திராவிடஸ்தான் என்பது இன்னும் விளக்கப்படவேண்டிய விஷயமாகும். தென்னிந்திய சமஷ்டிக்குள் மொழிவாரியாகக் கொண்ட பல நாடுகளைக் கொண்டது தான் திராவிடஸ்தான் என்று நான் கருதுகிறேன். தற்காப்புக்கும் எதிர்ப்புக்கும் வேண்டுமானால் வடநாட்டு யூனியனுடனும் சேர்ந்து கொள்ளலாம்.

இங்கு தோன்றியுள்ள தமிழிசை இயக்கமும் தெலுங்கு சங்கீதத்திற்கு எதிரானதல்ல. தாங்கள் புரிந்துகொள்ள முடியாத ஒரு சங்கீதத்தை—விளங்காத சங்கீதத்தைத்தான் எதிர்க்கிறார்கள். விளங்காத சங்கீதத்தைப் புகுத்தும் சங்கீத நிபுணர்களையும், சங்கீத சபை

(தொடர்ச்சி 11ம் பக்கம் பார்க்க)

---

படங்களைத் தமிழ்நாட்டில் தலை எடுக்கவிடாமல் ஆதரிக்காமல் எதிர்ப்பீர்களானால் உங்களுடைய அறிவு சுடர் விட்டு எரியும். அதனால் நீங்களும் பிற நாட்டார்களைப் போல சகல துறைகளிலும் முன்னேற்றமடைந்து உலக முன்னேற்ற நாடுகளில் ஒரு நாடாக விளங்குவீர்கள். இல்லையேல் பிறநாட்டார் முன்னிலையில் தலைகுனிய நேரும், நடைப்பிணமாக கருதப்படும். சினிமா கலையை தொழில் என்ற தோரணையில் தொலைத்து வரும் பட உற்பத்தியாளர்களே உங்கள் மூளையை மனிதன் முன்னேற்றத்திற்கு சிறிது பயன்படுத்துங்கள். அப்பொழுது கலையை வளர்க்கும் நண்பர்களாவீர்கள். பணம் மீட்டும் நோக்கத்தால் கலைக்கு அழிவு தேடாதீர்கள், பகுத்தறிவுக்கு பண்பு தரும் படத்தை உற்பத்தி செய்யுங்கள், மனிதன் வாழ்க்கையில் நிகழும் சம்பவங்களையே படம் எடுக்க முயலுங்கள்; இல்லையேல் எதிர்கால உலகத்தில் அறிவற்றவர்களாக கருதுவதுடன், ஆதரவு கிட்டுவதும் துர்பலமாகிவிடும். எச்சரிக்கை! எச்சரிக்கை! பகுத்தறிவு ஓங்குக!!

ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

# சேலம் மாநாட்டுக்கு வரும் சமுதாய சீர்திருத்தத்தீர்மானங்கள்

## ஜாதி பேதம்

1. (அ) மக்கள் பிறவியினால் ஜாதி பேதம் கற்பிக்கப்பட்டிருப்பதையும் அவற்றுள் உயர்வு கற்பிக்கப்பட்டிருப்பதையும் இக்கழகம் மறுப்பதோடு அவைகளை ஆதரிக்கிற, போதிக்கிற, கொண்டு இருக்கிற மதம், சாஸ்திரம், ஸ்மிருதி, புராணம் காவியம் என்பவை முதலாகிய எவைகளையும் பொது மக்களும் சிறப்பாக நம் கழகத்தவர்களும் பின்பற்றக்கூடாது என்று தீர்மானிப்பதோடு அவைகள் நம்மீது சுமத்தப்படாமல் இருக்க வேண்டிய காரியம் தீவிரமாய்ச் செய்யவேண்டும் என்றும் இம்மாநாடு தீர்மானிக்கின்றது.

(ஆ) மேலேகண்ட தன்மைகளை நீதியாகக் கொண்ட அரசியல் சட்டங்களையும் மாற்றி அமைக்க முயற்சிக்க வேண்டும் என்று இம்மாநாடு தீர்மானிக்கிறது.

(இ) வருணாச்சிரமதர்மம் என்கின்ற கொள்கையையும் அதன் பேரால் ஏற்படுத்தப்பட்ட பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன், பஞ்சமன் என்கின்ற பிரிவையும் இக்கழகம் ஒப்புக்கொள்ளுவதில்லை என்பதோடு அக்கொள்கைகள் எந்த முறையில் இருந்தாலும் ஒழிக்கப்பட வேண்டியவைகள் என்று இம்மாநாடு தீர்மானிக்கிறது.

(ஈ) மனிதனை மனிதன் தீண்டாமை, பார்க்காமை, ஒன்றாயிருந்து உண்ணாமை, தொழாமை முதலிய தன்மைகளை ஒழிக்கவேண்டும் என்று இம்மாநாடு தீர்மானிக்கிறது.

2. மக்கள் தங்கள் பெயர்களுக்குப் பின்னால் ஜாதிப்பிரிவைக்காட்டும் சொற்களையும் மற்றும் குறிகளையும் விட்டுவிடவேண்டும் என்று இம்மாநாடு தீர்மானிக்கிறது.

## பெண்கள்

2. (அ) பெண்களுக்கு ஆண்களைப் போன்ற சொத்து உரிமையையும், இருவருக்கும் கல்யாண ரத்து உரிமையையும், கலப்புமண உரிமையையும் அளித்து அவைகள் சட்டமாக்கப்பட வேண்டும் என்றும் இம்மாநாடு தீர்மானிக்கிறது.

(ஆ) விதவை மணம் ஆதரிக்கப்பட்டு பெருவாரியாக அமுலுக்கு கொண்டு வரப்படவேண்டுமென்று இம்மாநாடு தீர்மானிக்கிறது.

(இ) திருமணங்கள், பதிவுத் திருமணங்களாகவும், அல்லாவிட்டால் பார்ப்பனப் புரோகிதம், ஆடம்பரம், வீண் [illegible] இல்லாததாகவும், [illegible] இருந்து [illegible] மேல் இல்லாமலும் நடத்தப்பட வேண்டும் என்று இம்மாநாடு தீர்மானிக்கின்றது.

## சமயம் கோவில் மடம்

3. (அ) கோவில்களில் பல கடவுள் கள் தன்மையையும், கடவுளுக்கு உருவத் தன்மையையும் அதற்கு பெண்டு பிள்ளை, பல மனைவி, காதற்கிழத்தி தன்மையையும் அதற்கு திருமணம், ஒய்யாரம், உற்சவம் ஊர்கோலம் சதுர் கச்சேரி பாணவேடிக்கை முதலாகிய ஆடம்பரங்கள் செய்யப்படுவதையும் நிறுத்தப்படவேண்டும்.

தொழுகைக்கும் பூசைக்கும், தாகன் தேங்காய், பழம், கற்பூர ஆர்த்தி, நிவேதனம் (படைப்பு) முதலியவைகள் செலவிடுதல் ஆகியவைகள் ஒழிக்கப்பட வேண்டும்.

(இ) மடங்கள் மடாதிபதிகள் என்கின்ற தன்மைகள் மனித நாகரிகத்திற்கும், பகுத்தறிவிற்கும், சுயமரியாதைக்கும் பொருத்தமற்றதாக இருப்பதாலும் அவைகள் இன்றைய நம் வாழ்விற்கும் லக்ஷியத்திற்கும் வேண்டாததாகவும், விரோதமானதாகவும் இருப்பதாலும் அவைகளால் பெரிதும் ஒழுக்கமோ, உயர்குணமோ, அறிவு வளர்ச்சியோ, சமுதாய ஒற்றுமையோ ஏற்படுவதற்கு இல்லாமல் இருப்பதினாலும் அவற்றின் அடிப்படையை மாற்றி அவைகளை சமுதாயவளர்ச்சிக்கும் மேன்மைக்கும் ஒற்றுமைக்கும் பாடுபடும் ஸ்தாபனங்களாக மாற்றவேண்டும்

(ஈ) கோவில்களிலும், மடங்களிலும் ஏராளமான பொருளும் வருவாய்களும் இருப்பதால் அவைகள் மக்களின் கல்வி. சுகாதாரம், வைத்தியம், விஞ்ஞானம் தொழிற்சாலை, இயந்திரசாலை, கண்காட்சி முதலிய காரியங்களுக்கு பயன்படுத்தச் செய்யவேண்டும் என்பதாக இம்மாநாடு தீர்மானிக்கின்றது.

## கல்வி

அ. கல்வியானது அறிவு வளர்ச்சிக்கும் புலமைக்குமே தவிர மதப்பிரசாரத்திற்கு ஆக அல்ல என்பது கல்வியின் அடிப்படைத் தத்துவமாக இருக்கவேண்டும்.

ஆ. பகுத்தறிவுக்குமாறானதும் மூடநம்பிக்கையை வளர்ப்பதுமான எந்த விஷயங்களும் கல்வியில் பாடமாகவோ பாட புத்தகமாகவோ கற்பிக்கப்படுவதாகவோ இருக்கக்கூடாது.

இ. கல்வி கற்பிக்கப்படுவது என்பதானது யாவருக்கும் பொதுவானதும் தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்களுக்கும் தொழிலாளிகளுக்கும் பிற்பட்ட வகுப்பாருக்கும் முதல் உரிமை அளிப்பதாக இருக்கவேண்டும்.

ஈ. சாதாரண வாழ்க்கைத் தேவைக்கும் சாதாரண அறிவு தன்மைக்கும் [illegible] கல்விமுறை பொதுவில் [illegible] எல்லோருக்கும் எண், எழுத்து, வாசிப்பு இருக்கும்படியான அளவு கல்வி பொது இலவச கட்டாயக் கல்வி முறையாக இருக்க வேண்டும்.

உ. அரசியல் நிர்வாகத் தேவைக்கு மேற்பட்ட கல்வியின் பொறுப்பையும் உயர்தரக்கல்வி என்று சொல்லப்படுவதின் பொறுப்பையும் சர்க்கார் ஏற்றுக் கொள்ளக்கூடாது என்பதோடு பொது நிதியில் இருந்து அவைகளுக்கு செலவழிக்கவும் கூடாது, என்று இம்மாநாடு தீர்மானிக்கிறது.

## விவசாயம்

1. விவசாய முறை.
2. நீர் பாய்ச்சல் வசதி.
3. தனிப்பட்ட மக்களுக்கு நில அடைப்பு (தாக்கான்து) ஆகிய இவைகளுக்கு ஒரு தனிப்பட்ட இலாகா ஏற்படுத்தி இவற்றை ஒரு தொழில் முறையாக நடத்தவேண்டும்.

## தொழிலாளி

தொழிலாளிகளுக்கு இலாபத்தில் பங்கும் அப்பங்கை முதலீட்டுப் பங்குடன் சேர்க்கப்படவும் வேண்டும்.

மற்றவை ஜஸ்டிஸ் கட்சிக்குப் டெரியார் அளித்த திட்டத்தில் இருக்கிறது.

நம் கட்சிக்கு ஒழுங்குமுறை நடவடிக்கை எடுத்துக்கொள்ளத்தக்க பாதுகாப்பு இருக்கவேண்டியது அவசியம் என்று இம்மாநாடு தீர்மானிக்கிறது.

## கட்சி அரசியல் தீர்மானங்கள்

1. (அ) இந்த மாநாடானது ஜஸ்டிஸ் கட்சி என்னும் இக்கட்சிக்கு உள்ள தென் இந்திய நலஉரிமைச்சங்கம் என்ற பெயரை திராவிடர்கழகம் Dravidian Association என்று பெயர் மாற்றத் தீர்மானிக்கிறது

(ஆ) அதன் கொள்கைகளில் திராவிடநாடு என்ற பெயருடன் நம் சென்னை மாகாணம் மத்திய அரசாங்க நிர்வாகத்தின் ஆதிக்கம் இல்லாததும் நேரே பிரிட்டிஷ் செக்ரட்டரி ஆப் ஸ்டேட்டின் நிர்வாகத்திற்குக் கட்டுப்பட்டதுமான ஒரு தனி ஸ்டேட் நாடாக பிரிக்கப்பட வேண்டியது என்ற கொள்கையை முதற் கொள்கையாக சேர்க்கப்பட்டிருக்கிறது என்று இந்த மாநாடு தீர்மானிக்கிறது.

3. திராவிட கழகத்து அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் திராவிடநாடு அமைப்புக்கு ஒப்புக்கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்று தீர்மானிக்கிறது.

## திருமணம்

தென்னாற்காடு ஜில்லா செஞ்சிக்கடுத்த மேலச்சேரியில் தோழர் வீ. ராமச்சந்திர கவுண்டர் அவர்களின் பேத்தி கமலாவுக்கும் முருக்கைப்பாக்கம் தோழர் சி. எத்திராஜுலு நாயகர் புதல்வர் கண்ணையனுக்கும் [illegible] இல்லத்தில் 31-8-44-ல் [illegible] திருமணம் நடைபெறும்.

ரோஜா முத்தையா

# ஜஸ்டிஸ் கட்சியும் திராவிடஸ்தானும்

## தோழர் ராமநாதன் விளக்கம்

சென்னை, ஆக. 24—

"பெரும்பான்மையோர்கள் ஆதிக்கத்திற்கு பயந்தே, சிறுபான்மையோர்கள் தங்கள் உரிமைகளைப் பெற விரும்புகிறார்கள். இது அலட்சியமாகத் தள்ளிவிடக்கூடிய விஷயமன்று. ராஜீய முன்னேற்றமும் நிலையான பொறுப்பான சர்க்காரும் ஏற்படவேண்டுமானால், இந்நாட்டிலுள்ள பல்வேறு வகுப்பினரிடையே நம்பிக்கை ஏற்பட வேண்டும். இவ்விஷயங்களை எவ்வளவுக்கெவ்வளவு உதாசினமாக கருதுகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு இவை பெரிதாகவும், சிக்கலானதாகவும், மாறிக்கொண்டே வரும். ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைக்கு பாகிஸ்தான் வடக்கில் அவசியமானால், சுரண்டும் ஒரு வகுப்பினரிடமிருந்து, சுரண்டப்படுபவர்களை மீட்க திராவிடஸ்தான் தெற்கில் அத்யாவசியமாகும். பாகிஸ்தானும், திராவிடஸ்தானும் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டிருக்கின்றன. ஒன்றைவிட்டு மற்றொன்றை கொடுக்க நினைப்பது முடியாத காரியம்" என்று மாஜி காங்கரஸ் மந்திரி தோழர் எஸ். ராமநாதன், முன்னேற்ற யுவஜன சங்க ஆதரவில் நேற்றுமாலை செயின்ட்மேரீஸ் ஹாலில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசினார். கூட்டத்திற்கு டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி தலைமை வகித்தார்.

டாக்டர் கிருஷ்ணசாமி முன்னுரையாகப் பேசுகையில்; பல விஷயங்களில் முரணான கொள்கையுடையவரானதால் ராமநாதனை இதுவரை ஒருமித்த அபிப்பிராயத்துடன் ஒரு இடத்தில் சந்திக்கவில்லை என்று குறிப்பிட்டு விட்டு தம் வகுப்பினர் விடுதலைக்காகவே இப்பொழுது உழைக்க முன்வந்திருக்கிறார் என்று கூறினார். மனதிலுள்ள விஷயத்தை தைரியமாக பயமின்றி எடுத்துரைக்க முன்வந்திருப்பதாக தோழர் ராமநாதனை பாராட்டிப் பேசினார். திராவிடஸ்தான் வெகுநாள் பிரச்சினை என்றும், இப்பொழுது அது ஒரு நிலைக்கு வந்திருக்கிறது என்றும் கூறினார்.

மேலும், தோழர் ராமநாதன் பேசியதின் சாரமாவது:—

நெருக்கடியான சமயத்தில் தேச நலன் ஒன்றையே பிரதானமாகக் கொண்டு, கஷ்டங்களைப் போக்கடிக்க மனதிலுள்ளதை பட்டவர்த்தனமாகத் தெரிவித்துவிடுவதுதான் தேச நன்மையைக் கோருவோரின் கடமையாகும். [illegible] சீர்கேடான நிலைமைக்குப் போகும் பொழுது அந்த அபாயத்தை நான் குறிப்பிடுவது அவசியமாகிறது. மனதிலுள்ளதை பயமின்றி தெரிவிக்காமல், தலைவருக்கு சர்வாதிகாரத்தையும் கொடுத்து விட்டு அவர் செய்வதை கண்மூடித்தனமாக பின்பற்றுவது மிகவும் அபாயமானது. காங்கரஸ் அதிகாரத்தை உதறிவிட்டது முதல் இதுவரை பல தப்பிதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. கிரிப்ஸ் திட்டத்தை மறுத்ததும், ஆகஸ்டு தீர்மானத்தை நிறைவேற்றியதும் பெருந்தவறேயாகும். கிரிப்ஸ் திட்டத்தை மறுத்தது, ஆகஸ்டு தீர்மானத்தை நிறைவேற்றியது முதலிய நல்லெண்ணத்துடன் செய்த குற்றங்களை நான் காங்கரஸ் தலைமையின் மீது சுமத்த விரும்பவில்லை. ஆகஸ்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இப்பொழுது 2 வருடம் ஆகிவிட்டது; இது வெற்றிடைந்தது என்று சொல்லக்கூடியவர் ஒருவருமில்லை. தோழர் காந்தியே இது தோல்வியுற்றதாகவும், பெரும்பாலானோர் தம்மைத் தப்பர்த்தம் செய்து கொண்டதாகவும் கூறுகிறார். தோல்வி என்னமோ மறுக்க முடியாதது அதை ஒப்புக்கொண்டு அதை தம்முடையதாக தோற்றவர் ஏற்றுக்கொள்வதற்கு தைரியம் வேண்டும். தப்பிதங்களை திருத்திக் கொண்டு, மறுமுறை ஒரு காரியத்திலிறங்குவதே நேர்மையான முறை. ஆனால் தோழர் காந்தியார் அவ்விதம் எதுவும் செய்து விடவில்லை. ஆகஸ்டு தீர்மானம் அமுலிலிருப்பதாகவும், ஆனால் காந்தியார் கைது செய்யப்பட்டு விட்டதால் அவருக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரம் ரத்தாகிவிட்டதென்றும் இப்பொழுது கூறுவது ஒன்றுக்கொன்று முரண்பாடானதாக இருக்கிறது. காந்தியாருக்கு அதிகாரம் ரத்தாகிவிட்டதென்றால் இம்மாதம் 9ந் தேதி பம்பாயில் மாதிரி இயக்கத்தை நடத்த அவருக்கு யார் அதிகாரம் கொடுத்தார்கள்? செயல்களிலும் வார்த்தைகளிலும் முரண்பாடின்றி தப்பிதத்தை ஒப்புக்கொள்வதே தலைவரின் கடமை. வகுப்பு வேற்றுமையை ஒழிக்க ராஜாஜி திட்டத்தை 2 வருஷங்களுக்கு முன்னால் நாங்கள் அனுப்பியபோது காங்கரஸ் அதை நிராகரித்து தோழர் ஜகத் நாராயண் லாலின் தீர்மானத்தை நிறைவேற்றிற்று. இப்பொழுது ராஜாஜி திட்டத்திற்கும், தோழர் லாலின் தீர்மானத்திற்கும் எவ்விதத்திலும் வேற்றுமையில்லை என்று கூறப்படுகிறது. இம்மாதிரியான முரண்பாடான கோட்பாடுகள் ஏற்பட்டால் வெவ்வேறு ராஜீய அபிப்பிராயமுள்ள நானும், டாக்டர் கிருஷ்ணசாமியும் ஒரே இடத்தில் சந்தித்துப் பேசுவது ஆச்சரியமானதன்று; காங்கரசுக்குள்ளேயே பிராமண-பிராமணரல்லாதார் பிரச்சினை இருந்து வருகிறது.

வெகுநாட்களாகவே தனியாக டாக்டர் கிருஷ்ணசாமி தம் பத்திரிகையில் திராவிடஸ்தான் விஷயமாக எழுதி வருகிறார்.

திராவிடஸ்தான் பிரச்சினை பாகிஸ்தானுடன் இணைக்கப்பட்டிருக்கிறது. பாகிஸ்தான் என்பது என்ன? சிலர் அர்த்தம் செய்து கொண்டிருப்பது போல் பாகிஸ்தான் பூகோள சாஸ்திரத்தையும், இயற்கையையும் மாற்றுவதோ, மாகாணங்களின் எல்லைகளை மாற்றி அமைப்பதோ அல்ல. பெரும்பான்மையோரின் ஆதிக்கத்துக்குப் பயப்படும் சிறுபான்மையோரான முஸ்லிம்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தக் கைக்கொள்ளும் வழியே அது. அதே போலத்தான் திராவிடஸ்தானும். இந்தியாவிலிருக்கும் பல்வேறு வகுப்பினரிடையே நம்பிக்கையை உண்டாக்காவிட்டால், ராஜீய முன்னேற்றமோ, ஸ்திர சர்க்காரோ அமைப்பது முடியாத காரியம். ஆதிக்கத்தின் பேரில் கட்டாயப்படுத்தி ஒற்றுமை ஏற்படுத்திவிடலாமென்பதும் முடியாத காரியமே. சிறுபான்மையோர்களின் பயத்தை நீக்க முயற்சிக்க வேண்டும். அவர்கள் கோருவதைக் கொடுத்தே தீரவேண்டும். விடுதலைக்காக ஆவலுடன் காத்திருக்கும் இவர்களின் கோரிக்கைகளை செவ்வையாக பரிசீலனை செய்ய வேண்டும்.

திராவிடஸ்தான் கோரிக்கை ஆந்திர மாகாண பிரச்னைக்கு எதிரிடையாக ஏற்படுத்தப்பட்டிருக்கும் தமிழர்களின் செயல் என்று ஆந்திரர்கள் தப்பர்த்தம் செய்து கொள்ளும்படியாக சிலர் செய்து விட்டனர். இது சுத்த அபத்தமானது. திராவிடஸ்தான் கோருபவர்களின் விருப்பத்திற்கும் விரோதமானது. இப்பிரச்னை தமிழர் தெலுங்கர் என்பதல்ல. பிராமணர், பிராமணரல்லாதார் என்பதேயது. இது வெகுகாலமாக இருந்துவருகிறது என்பதற்கு புஸ்தகம், மதக்கோட்பாடு முதலிய பல ஆதாரங்கள் இருக்கின்றன. தமிழ் தெலுங்கு முதலிய பாஷாவாரியாக உள்ள பிராந்தியங்களின் பெடரேஷனே திராவிடஸ்தான். அதை பாஷைப் பிரிவினை என்று கூறிவிட முடியாது.

இப்பிரச்னை கிளம்பியபோது அதற்கு எதிராக எதுவது விஷமச் செயல்செய்ய ஆந்திராவிலுள்ள பிராமணர்கள் அதற்கு ஒரு காலையும் தலையையும் வைத்து தங்களுக்குப் பிரயோசனமுள்ளதான முறையில் அதைமாற்றி, தமிழர்கள் தெலுங்கர்களுக்கு விரோதமாகக் கிளம்பிய பிரச்னை இது என்று மாற்றி கயிறு திரித்து விட்டார்கள். பாமர ஜனங்கள் அதை நம்பி தமிழர்களால் ஏற்படும் தொல்லை எனவே இதை எதிர்க்க ஆரம்பித்தனர். தெலுங்கர்கள் மீது தமிழர்கள் எப்

(தொடர்ச்சி 10ம் பக்கம் பார்க்க).

# பறக்கும் குண்டுகளும், ஜப்பானியரின் கொடுமைகளும் நிறைந்த இந்தப்போரில்

## செஞ்சிலுவை

மனித சமுதாயத்திற்காக பாடுபடுகிறது.

நோயாளிகளையும் காயமடைந்தவர்களையும் காப்பாற்றுகிறது.

யுத்தக் கைதிகளுக்கு ஊக்கமளிக்கிறது.

எனவே

**"செஞ்சிலுவைக்காக"**

என்ற தலைப்பில்

## மே. த. கவர்னரின்

**யுத்த நிதிக்கு**

பண உதவி செய்து

**ஒரு சிறந்த காரியத்திற்கு உதவி புரியுங்கள்.**

# இராசிபுரம் தாலூகா திராவிடர் மாநாடு

ஷை மாநாடு இராசிபுரம் ஓரியண்டல் தியேட்டரில் 22-8-44-ல் தோழர் சி. என். அண்ணாதுரை எம். ஏ., அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. பஸ் ஸ்டாண்டிலிருந்து மாநாட்டுக் கொட்டகைக்கு தலைவர்கள் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்கள். காலை 9-30 மணிக்கு மாநாடு ஆரம்பமாயிற்று. வரவேற்புக் கழகத் தலைவர் தோழர் ப. அ. சித்தப்பா அவர்கள் எல்லோரையும் வரவேற்று தமது வரவேற்புரையை வாசித்தார் (அது பின்னர் வரும்) தோழர் இரா. நெடுஞ்செழியன் பி. ஏ., (ஆனர்ஸ்) கொடியேற்றினார். பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் மாநாட்டைத் திறந்து வைத்து அரிய சொற்பொழிவாற்றினார். பின்னர் தோழர் சி. என். அண்ணாதுரையவர்கள் தமது நீண்ட தலைமை சொற்பொழிவை நிகழ்த்தினார்.

பிற்பகல் மாநாடு ஆரம்பமானதும், தோழர் எ. பி. ஜனார்தனன் பி. ஏ. 'திராவிடநாடு' படத்தைத் திறந்து வைத்தார். தோழர் சி. பி. சின்னராஜு பெரியார் படத்தைத் திறந்துவைத்தார். தோழர் மணி அம்மையார் நாகம்மையார் அவர்கள் படத்தைத் திறந்துவைத்தார். காய்தே அஃஜம் ஜின்னா அவர்கள் படத்தை தோழர் இரா. நெடுஞ்செழியன் திறந்துவைத்தார்.

பின்னர், திராவிடநாடு தனிநாடாக பிரிய வேண்டுமென்றும், எஸ். ஐ. ஆர். எம். எஸ். எம். ரயில்வேக்களை இணைத்து 'தி கிரேட் டிராவிடியன் ரயில்வே' யென பெயரிடவேண்டுமெனக் கேட்டுக் கொள்வதாகவும், ஆரம்ப கல்வித்திட்டத்தைக் கட்டாயமாக்க வேண்டுமென்றும், திராவிடநாட்டிலுள்ள நமது இயக்க சங்கங்களை திராவிடர் கழகமாக மாற்ற வேண்டுமென்றும், காங்கரசார் அரசாங்கத்தாருடன் ஒத்துழையாதிருந்தும் சர்க்கார் அவர்களுக்கே சலுகை காட்டிவருகிறார்கள் என்பதையும், நமது இயக்கத்தார் ஆரம்பமுதல் இதுவரை ஒத்துழைத்தும் தற்போது யுத்தத்தில் நிபந்தனையின்றி எல்லாவழிகளிலும் பூரண உதவியளித்து வந்தும் அரசாங்கத்தார் நம் இயக்கத்தை புறக்கணித்து வந்திருப்பதையும் கண்டு வருந்துவதுடன் அரசாங்கத்தாரால் நமதியக்கத் தோழர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் கௌரவப்பட்டங்களையும் கௌரவப் பதவிகளையும் வாபீஸ் செய்து ஸ்தலஸ்தாபனங்களில் நாமினேஷன் பதவிகளையும் ராஜிநாமா செய்யவும் வேணுமாக இம்மாநாடு மாகாண மாநாட்டுக்கு சிபார்சு செய்கிறதென்றும், பெரும்பாலான போர்டு ஹைஸ்கூல்களில் பார்ப்பனரே தலைமையாசிரியராகவிருப்பதால், பார்ப்பனரல்லாத மாணவர்கள் முன்னேற்றம் பாதிக்கப்படுவதால் பார்ப்பனரல்லாதாரை நியமனம் செய்யவேண்டுமாக கேட்டுக் கொள்வதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

### பொதுக் கூட்டம்

மாநாட்டு பந்தலிலேயே தொடர்ந்து பொதுக் கூட்டம் நடைபெற்றது.

தோழர் சோமசுந்திர கவுண்டர் அவர்கள் தலைமை வகித்தார்.

தோழர்கள் பெரியார் ஈ. வெ. ரா., சி. என். அண்ணாதுரை, ஜனார்த்தனன், நெடுஞ்செழியன் முதலியோர், தொழிலாளர்கள், விவசாயிகள், நமது நிலை, கல்வி, திராவிடநாட்டுப் பிரிவினை முதலான பற்பல விஷயங்களைப் பற்றி விளக்கமுற எடுத்துரைத்தார்கள். இரவு 10-30 மணிக்கு கூட்டம் இனிது கலைந்தது.

# இராசிபுரம் விவசாயிகள் மாநாடு

இராசிபுரம், நாமக்கல் தாலூகா விவசாயிகள் மாநாட்டை 27-8-44-ல் நடக்கவிருந்ததை, தலைவர்களுக்கு வேறு வேலையிருப்பதாக வந்திருக்கும் கடிதப்படி அடுத்த செப்டம்பரில் நடத்துவதென முடிவு செய்திருப்பதை விவசாயிகளுக்கும் பொதுமக்களுக்கும் தெரியப்படுத்திக் கொள்கிறேன் என விளம்பர அதிகாரி தோழர் கே. வி. கே. ராமசாமி.

# சேலம் திருவள்ளுவர் கழகம்

சென்ற ஆண்டு நிகழ்ந்த தமிழுணர்ச்சி மாநாட்டின் தொடர்பாக இவ்வாண்டு ஆகஸ்டு 9, 10 தேதிகளில் "திருக்குறள் மாநாடு" சேலம் கல்லூரிக் கட்டடத்தில் சிறப்பாக நடைபெற்றது. பல புலவர்கள் இரண்டு நாட்களிலும் விரிவுரைகள் நிகழ்த்தினார்கள்.

குடி அரசு

1944-ஆம் ஆகஸ்டு-மீ 26-உ

# சேலம் மாநாட்டுக்குப் பின்பு

அன்பர் சி. இராஜகோபாலாச்சாரியார் அவர்கள் 'தினமணி' பத்திரிக்கை நிருபருக்கு அளித்த பேட்டியில் அதாவது,

'தோழர் இராமனாதன் அவர்கள் பேசி வரும் திராவிடஸ்தான் இராஜியம் பற்றி உங்கள் பாகிஸ்தான் திட்டத்தில் இடம் உண்டா' என்று 'தினமணி' நிருபர் கேட்டதற்கு ஆச்சாரியார்,

"திராவிடஸ்தான் கோரிக்கையை இப்போது பரிசீலனை செய்ய வேண்டிய அவசியமில்லை. ஈ.வெ. ராமசாமிப் பெரியாருக்கு பெரும்பான்மையான பார்ப்பனரல்லாதாருடைய ஆதரவு நிச்சயமாகக் கிடைத்திருக்கும் சமயத்திலே இந்தப் பிரச்சினையைப் பரிசீலனை செய்ய வேண்டியது அவசியமாகும்" என்று பதிலளித்து இருக்கிறார்.

இந்த பதிலின் கருத்து என்ன என்று பார்ப்போமானால் 'ஈ.வெ. ராமசாமிப் பெரியார் பார்ப்பனரல்லாதாருக்கு பிரதிநிதி என்பதாக இப்போது நான் கருதவில்லை. அவர் பிரதிநிதியாக ஆன காலத்தில் பார்த்துக்கொள்ளலாம்' என்பதேயாகும்.

இப்படி இவர்கள் சொல்லுவதற்கு காரணம் என்னவென்று பார்ப்போமானால் அவருக்குள்ள "பார்ப்பனரல்லாதார் ஒன்று சேர்ந்து ஒரு அபிப்பிராயத்துக்கு வரமாட்டார்கள்" என்கின்ற உறுதிதான். இந்த உறுதியை ஆச்சாரியார் கொண்டதில் அதிசயமில்லை. ஒரு இனம், ஒரு மதம், ஒரு ஜாதி, ஒரு கடவுள் பிள்ளைகள் என்று எண்ணிக்கொண்டு, இனத்துக்கு ஆக உயிரை விடுவதில் முன்பின் யோசிக்காத துணிச்சல் கொண்டு, ஒரு தலைவன் ஆணைவழி கண்மூடி நடந்துகொண்டிருக்கும் முஸ்லிம்கள் தங்கள் ஸ்தாபனத்தின்போல் பாகிஸ்தான் கேட்டதற்கே "முஸ்லிம்கள் எல்லோரும் சேர்ந்து கேட்டால் யோசிப்போம்" என்று சொன்ன ஆச்சாரியார் கும்பலானது மேல் குறிப்பிட்ட ஒரு நிலையுமற்ற பார்ப்பனரல்லாதாரை (திராவிடரை)ப் பார்த்து "நீங்கள் ஒன்று சேர்ந்து வந்து கேட்டால் யோசிப்போம்" என்று சொன்னதில் எப்படி அதிசயமிருக்க முடியும்?

திராவிடருக்கு ஒரு மதம் கிடையாது ஆதலால் சமயத்தின்பேரால் ஒன்றுசேரமாட்டார்கள், அவர்களுக்கு இன உணர்ச்சி கிடையாது. ஆதலால் இனத்தின்பேரால் ஒன்றுசேரமாட்டார்கள்; திராவிடருக்கு ஒரு ஜாதி கிடையாது ஆதலால் ஜாதியின்பேரால் ஒன்றுசேரமாட்டார்கள்; திராவிடர்களுக்கு ஒரு கடவுள் கிடையாது, ஆதலால் கடவுள் பேராலும் ஒன்றுசேரமாட்டார்கள்; திராவிடர்களுக்கு தலைவர்களும் கிடையாது. தலைவரை பின்பற்றுகிற குணமும் எப்போதும் இருந்ததில்லை. ஆதலால் ஒரு தலைவரைப் பின்பற்றுவதிலும் ஒன்றுசேரமாட்டார்கள். இப்படிப்பட்ட திராவிடர்களைப் பார்த்துத்தான் ஆச்சாரியார் "உங்களுக்கு நெற்றியில் ஒரு கொம்பு முளைத்த காலத்தில் அதாவது நீங்கள் ஒன்றுசேர்ந்த காலத்தில் திராவிடஸ்தான் யோசிக்கப்படும்" என்கின்றார்.

ஆனால் இன்று "திராவிடஸ்தான்" கேட்பது 4-கோடி திராவிடர்களும் அல்ல என்பதையும் ஒரு ஒத்தைமனிதன்தான் அந்த 4-கோடி மக்களுக்குமாகக் கேட்கத்துவங்கியது என்பதையும், அதுவும் அந்த ஒத்தை மனிதனைப் பின்பற்றுவதாக தங்கள் தங்கள் சுயநலத்தைக் கோரி வேஷம்போட்டுக்கொண்டு தங்கள் காரியங்களையும் சாதித்துக்கொண்டு அந்த ஒத்தை மனிதனையும் சமயம்பார்த்து காலை வாரிவிட்டு கூலிபெற காத்துக்கொண்டிருக்கும் மக்கள் நடுவிலே இருக்கிற மனிதனால் கூப்பாடு போடப்படுகிறது என்பதையும் நாம் ஒப்புக்கொள்கிறோம். அது மாத்திரமல்லாமல் பொதுவாக திராவிடர்களிலேயே ஒரு குறிப்பிடத் தகுந்த கூட்டம் ஆச்சாரியார் கும்பலின்— ஆச்சாரியார் கும்பலுக்கு ஆதரவளிக்கும் ஸ்தாபனத்தில் இருந்துகொண்டு அடிவருடி பாதத்தீர்த்தம் பருகிக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நாம் மறக்கவில்லை. இன்னும் பல சதிச் செயல்களும் மானத்தில் கவலையற்ற இழிசெயல்களும் பார்ப்பனரல்லாதாருக்குள் இருக்கின்றன என்பதையும் நாம் மறக்கவில்லை.

ஆனால் திராவிடஸ்தான் திராவிடர்களுக்கு அவசியமானதும் நியாயமானதும் என்பது மாத்திரம் உண்மையாய் இருக்குமானால் திராவிடஸ்தான் அமைக்க ஆச்சாரியார் குறிப்பிட்ட ஒரு இராமசாமிப்பெரியாரே போதும் என்பதும், யார் தடுத்தாலும் தடைபடாமல் திராவிடநாடு ஏற்பட்டே தீரும் என்பதும் நமது முடிவாகும்.

அன்றியும் திராவிடர்கள் அத்தனை பேரும் சேர்ந்து அல்லது பெரும்பான்மையான பார்ப்பனரல்லாதார் திராவிடஸ்தான் கேட்பதானால் இதற்கு "கடாக்ஷம் அளிக்க" ஆச்சாரியார் தயவு எதற்கு என்பது நமக்கு விளங்கவில்லை.

ஆச்சாரியாருக்கு ஒன்றை நினைப்பூட்டுகிறோம். இந்தி திராவிடர்களுக்கு கட்டாயமாகப் படிப்பிக்க வேண்டும் என்று சொன்ன ஆச்சாரியார் பெரும்பான்மையான பார்ப்பனரல்லாத (திராவிடர்கள் ஆதிதிராவிடர்கள் மற்றும் எல்லா ஆரியர்கள்) மக்களின் பிரதிநிதியாய், அவர்கள் சம்மதம் பெற்று இருந்த ஆச்சாரியாரும் அதற்கு எதிர்ப்பு ஏற்பட்ட காலத்தில் தோழர் ஆச்சாரியார், "இந்த நாட்டு மக்களின் பெரும்பான்மையான மக்களின் ஓட்டுப் பெற்று சட்டப்படியான தக்க மெஜாரிட்டி பலத்தோடு இம்மாகாணத்தின் ஆட்சி மன்றத்தின் மேல் பீடத்தில் வீற்று நான் செய்யும் தீர்ப்பை ஒரு ராமசாமி நாயக்கர் சொன்னால் மாற்றிக்கொள்ளுவேனா" என்று வீராப்புப்பேசிய ஆச்சாரியார், அதே வாயால் அதே மெஜாரிட்டியோடு அதே பதவியில் இருந்து கொண்டு, "இந்த அல்ப விஷயமான இந்திக்கு இவ்வளவு எதிர்ப்பா! ஐயய்யோ இதென்ன! ஈசல் புற்றிலிருந்து ஈசல் புறப்படுவது போல் எதிர்ப்பு கிளம்புகிறதே" என்று பேசவில்லையா?

சர்வ அதிகாரமும் தன்கையில் வைத்து போலீசும் பட்டாளமும் சதா தனக்கு தலை வணங்க வைத்துக்கொண்டிருந்த சமயத்தில் ஆச்சாரியார் போலீஸ் பட்டாள வியூகத்தின் நடுவில் நடந்துகொண்டிருக்க வேண்டியதான நிலை ஏற்படவில்லையா? அதுவும் அந்த இந்தி எதிர்ப்பை ஜஸ்டிஸ் கட்சி ஏற்றுக்கொள்ளாத காலத்திலும் பார்ப்பனரல்லாத கல்யாணசுந்தரங்கள், மீனாட்சி சுந்தரங்கள், முத்தரங்கங்கள், சொக்கலிங்கங்கள், நாடிமுத்துக்கள், தேவர்கள் எதிர்த்த காலத்திலும் இந்தி எதிர்ப்பு கட்சிக்குள்ளாகவே சிலர் அதைக்கெடுக்க சூழ்ச்சிகளும் துரோகங்களும் செய்தகாலத்திலும் ஸ்டாலின் ஜெகதீசனை அடித்துக்கொண்டு போய் சோறூட்டி பட்டினியைக் கெடுத்து 'அவமானம்' ஏற்படுத்திய காலத்திலும், பெரியார் சிறையில் இருக்கும்போது பெரியார் சிஷ்யர்களாலேயும் இயக்கத்தை நிறுத்திவிட முயற்சிகள், சூழ்ச்சிகள் நடந்தகாலத்திலும் இந்தி எதிர்ப்பு வெற்றிபெற நடந்து சரித்திரத்தில் இடம்பெற்று ஆச்சாரியாரை சிம்மாசனத்தில் இருந்து இறக்கிவிடவில்லையா என்பதை ஆச்சாரியார் தனது அனுபவத்தைக் கொண்டே பார்க்கட்டும் என்று வேண்டுகிறோம்.

பொதுஜன அபிப்பிராயத்துக்கும் திராவிடஸ்தானுக்கும் சம்மந்தம் கிடையாது. ஒரு மனிதன் சொன்னது தான் அது என்றே வைத்துக் கொள்ளுவோம். ஆனால் காங்கரசில் காங்கரஸ் பொதுஜன அபிப்பிராயத்திற்கும், பாகிஸ்தானுக்கும் என்ன சம்மந்தம் இருந்தது?

காங்கரஸ் அத்தனை பேர்களாலும் ஆச்சாரியாராலும், காந்தியாராலும் "கூடவே கூடாது, முடியவே முடியாது" என்று சொல்லப்பட்ட அபிப்பிராயம் ஒரு இராஜகோபாலாச்சாரியாரால் "பாகிஸ்தான் ஒப்புக்கொண்டாகவேண்டும்" என்று சொல்லப்பட்ட அபிப்பிராயம் இன்று ஜாஜ்வல்யம் பெற நின்று ஜின்னா வீடுதேடி மேளவாத்தியங்களோடு காணிக்கைப் பிரசாதமாக மகாத்மாக்களால் சுமந்துகொண்டு செல்லுகிறதா இல்லையா என்று கேட்கின்றோம்.

ஒரு ஆச்சாரி அபிப்பிராயம் உன்னத மக்கள் அபிப்பிராயமாக ஆவதற்கு ஆச்சாரியாருக்கு ஸ்தானமில்லை. தலைமைப் பதவி இல்லை. பின்பற்றுகிறவர்கள் இருந்ததில்லை. முகத்தில் கரி, முதுகில் அடி, கூட்டத்தில் குழப்பம், வேஷ்டி சட்டை எல்லாம்பறித்தல்; இந்த நிலைகொண்ட ஆச்சாரியார் அபிப்பிராயம் இன்று எப்படி இருக்கிறது? ஆகவே இராமசாமிக்குத் திராவிடஸ்தான் பெறுவதற்கு இராமசாமி நினைப்பதே போதுமானது என்பதை ஆச்சாரியார் உணரும் காலம் வரும், அதுவும் அதிசமீபத்தில் வரும். ஆனால் நாம் திராவிடநாடு பெற ஆச்சாரியாரையோ காந்தியாரையோ ஜின்னாசாயபையோ திராவிட மக்கள் 100-க்கு 51-பேரையோ நம்பிக்கொண்டிருக்கவில்லை. திராவிடர்களுக்கு சமய சமுதாய அரசியல் முதலிய வாழ்க்கையில் இருந்துவரும் இழிவையும் சுயமரியாதை அற்ற தன்மையையும் முன்னேற்றத்தடை சாதனங்களையும் கைமுதலாக நம்பிக்கொண்டு இருக்கிறோம். எப்படியும் அது கிடைத்தே தீரும்.

ஆதலால் திராவிடநாடு கிடைப்பதற்கு திராவிடர்கள் பெரும்பான்மை அபிப்பிராயம் தேவை இல்லை. திராவிடநாடு பிரியவேண்டியது அவசியமா இல்லையா! என்பதுதான் தேவை. அவசியம் என்பதற்கு இதுவரையும் எவ்வித எதிர்ப்பும் ஏற்படவில்லை.

"பாகிஸ்தானுக்கு ஏற்பட்ட காரணங்கள் அத்தனையும் திராவிடஸ்தானுக்கும் பொருந்தும்; ஒரு மனிதன் கேட்டாலும் அதை யோசிக்க வேண்டியது அவசியமாகும்"

என்று ஆச்சாரியாரே ஈரோடு பேச்சில் சொல்லி இருப்பதை ஏனோ இன்று மறந்து விட்டார். ஆனாலும் 24-ம் தேதி அவர் திருவல்லிக்கேணியில் பேசியிருப்பது கவனிக்கத்தக்கதாகும். அதாவது:

'இராமசாமிப் 'பெரியாருடையதும், தோழர் ராமநாதனுடையதும் மெஜாரிட்டியாருடைய கருத்தாயிருக்குமானால், கண்டிப்பாய் கவனிக்கப்படும். மெஜாரிட்டி மக்கள் திராவிடஸ்தான் கோருவார்களேயானால், அவர்களை எவராலும் இந்தியாவுடன் சேர்த்து வைக்க முடியாது' என்பதாகும்

எப்படியோ இருக்கட்டும் சேலம் மாநாட்டிற்கு பின்பு திராவிடநாடு பிரிவினை திட்டத்தின் நிலை ஆச்சாரியாருக்கும் சர்க்காருக்கும் மற்றவர்களுக்கும் தெரியப்படப்போகிறது. யாருடைய மறுப்பும் யாருடைய சூழ்ச்சியும் திராவிட நாட்டை ஒன்றும் தடுத்துவிட முடியாது. தோழர் என். இராமநாதன் போன்ற வெடிகுண்டுகள் எத்தனை புறப்படப் போகின்றது என்பதையும், திராவிட மக்கள் தங்கள் நாட்டைப் பெற விரும்புகிறார்களா அல்லது தனிப்பட்ட யாரோ சிலர் பெரும் பட்டம், பதவி, பணம், உத்தியோகம், பெருமை முதலியவைகளைப் பெற விரும்புகிறார்களா என்பதையும் ஆச்சாரியார் பொறுத்திருந்து பார்க்கட்டும் என்று சவால் கூறுகிறோம்.

---

## பெரியார் ஈ. வெ. ரா.
### சுற்றுப்பிரயாணம்.

27-8-44 சேலம் மாநாடு தலைமை

30-8-44 மாயவரம் திருமணம், பொதுக்கூட்டம்.

3-9-44 ஈரோடு திராவிடர் கழகத்துக்கு, என்.எஸ். கிருஷ்ணன் அவர்களது கிந்தனார் கதையில் தலைமை.

10-9-44 நாகப்பட்டணம், திராவிடர் கழகத்துக்கு, 'போர்வாள்' டிராமாவில் தலைமை, பொதுக் கூட்டம்.

17-9-44 குளித்தலை திராவிட இளைஞர் மாநாடு.

1[illegible]-9-44 ஈரோடு.

---

## ஹரிஜன அனுமதியில்லாத ஓட்டல்களுக்கு 'லைசென்ஸ்' இல்லை

வேலூர்: பஞ்சாயத்து போர்டுக்குட்படாத பிரதேசத்தில் வைக்கப்படும் ஓட்டல்களில் ஹரி ஜனங்கள் அனுமதிக்கப்படாவிட்டால் 'லைசென்ஸ்' கொடுக்கக்கூடாதென சென்ற திங்கட்கிழமையன்று நடைபெற்ற வடஆற்காடு ஜில்லாபோர்டு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

## குளித்தலை திராவிடர் இளைஞர் மாநாடு

குளித்தலை பிரபல கண்டிராக்டரும் நீதிக்கட்சியின் பிரமுகருமான தோழர் கே. ஆர். வையாபுரி சோழகர் அவர்கள் இல்லத்தில் இவ்வூரில் திராவிட இளைஞர் மாநாடு அடுத்த செப்டம்பர் மாதம் 17 தேதி ஞாயிற்றுக்கிழமை கூட்டுவதென எல்லோராலும் ஏகோபித்துத் தீர்மானிக்கப்பட்டது.

மாநாட்டுத் தலைவர்: பழையகோட்டை இளையகுமாரர் தோழர் ந. அர்ச்சுனன் அவர்கள்.

மாநாட்டுத் திறப்பாளர்: பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள்.

மற்றும் பல தோழர்கள் முக்கிய பணி ஆற்றுவார்கள்.

## கானாடுகாத்தான் தமிழ்நாடு வானொலி கேட்போர் கழகம்

இக்கழகம் சுபானு வருஷம் ஆனி மாதம் 30ம் தேதி காணப்பெற்றது. சிறப்பு உறுப்பினருக்கு (வானொலிப்பெட்டி வைத்திருப்போர்) வருட சந்தா ரூபாய் மூன்று, ஏனையோருக்கு வருட சந்தா அணா நான்கு வீதம் வசூலித்திருக்கிறது. அப்போதே சில அன்பர்கள் சந்தா விகிதத்தில் மாறுதல் செய்யவேண்டுமென்று ஆலோசனை கூறினர். எனவே, முன்பு செலுத்திய முதல்வருடசந்தாவை நடப்பு வருடத்துக்கு சந்தாவாக்கவும், முன்செலுத்தியிருக்கும் சந்தாத் தொகையை ஆரம்பமுதலே மாற்றவும், கழக வளர்ச்சிக்குரிய ஆலோசனைகளை ஆய்ந்து தேவையான காரியங்களை கவனிக்க நாளை ஆவணி மாதம் 12உ (27-8-44) மாலை மூன்று மணிக்கு இங்கு ஒரு கூட்டம் நடைபெறும்.

இக்கழகம் நல்ல பலன் தரத்தக்க தமிழ்த்தொண்டு செய்யும். எல்லாத் தமிழ் மக்களுடைய—பொதுநல ஆர்வமுள்ள தொண்டர்களுடைய—ஒத்துழைப்பும் இதற்கு வேண்டும். ஒத்துழைப்பின் அளவுக்கு ஏற்றவிதமாக நற்பலனை-தமிழ் மக்கள் நல் வாழ்வை-பெறவேண்டுமென்பதே எங்கள் ஆவல், என செயலாளர் எழுதுகிறார்.

## நீத்தார் நினைவு நாள்

சிதம்பரம்: சிலவாண்டுகளுக்கு முன் காலஞ்சென்ற, மருத்துவகுல சங்கத் தலைவர் தோழர் கோபால கிருஷ்ணன் அவர்களின் தாயார் லெட்சுமி அம்மாளின் நினைவு நாள் 22-8-44-ல் தமிழாசிரியர் தோழர் கா. மு. மாணிக்கம் அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது. பல தோழர்கள் சொற்பொழிவாற்றினார்கள். இதுபற்றி 'குடி அரசு' வளர்ச்சிக்கு ஒரு ரூபாய் நன்கொடை யளிக்கப்பட்டது.

## திருச்சியில் பெரியார் தொண்டர் படை

20-8-44-ஆம் தேதி மாலை 7 மணிக்கு வரகனேரி தியாகராயர் வாசகசாலையில் தோழர் தி. பொ. வேதாசலம் அவர்கள் தலைமையில் நடந்த திராவிட தொண்டர்கள் கூட்டத்தில் சேலம் மாநாட்டிற்குச் செல்ல 'பெரியார் தொண்டர் படை' என்ற பெயரால் திருச்சி, ஸ்ரீரங்கம், பொன்மலை தோழர்கள் கொண்ட ஒரு தொண்டர் படை அமைக்கப்பட்டது. 150 தோழர்களுக்கு மேல் தொண்டர்களாக சேர்க்கப்பட்டு டை படைத் தலைவராக தோழர் தி. பொ. வேதாசலம் வக்கீல் அவர்களையும், உதவி கேப்டன்களாக தோழர்கள் திருச்சி, எஸ். பிரான்சிஸ், ஸ்ரீரங்கம் பரமசிவம், பொன்மலை பாக்கிரசம் முதலியவர்களை தேர்ந்தெடுக்கப்பட்டது.

சேலத்தில் நடக்கும் ஜஸ்டிஸ் மாநாட்டிற்குப் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்களை தலைவராகத் தேர்ந்தெடுத்ததற்கு இக்கூட்டம் மகிழ்ச்சியுடன் ஆதரிப்பதோடு, திராவிடநாடு தனியாகப் பிரிக்கப்பட்டு திராவிடநாட்டு கொள்கை நிறைவேறும் வரை பெரியார் அவர்களே 'ஜஸ்டிஸ்', திராவிட இயக்கத்திற்கு தலைமை வகித்து நடத்திவர வேண்டுமென்று இக்கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது என்றும், சேலம் மாநாட்டிற்குத் தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள் கொண்டு வரும் தீர்மானத்தை இக்கூட்டம் ஆதரிக்கிறது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

## சூலூர் திராவிடர் கழக நிர்வாகக்கமிட்டிக் கூட்டம்

16-8-44ந் தேதி தலைவரது இல்லத்தில் சுமார் $10\frac{1}{2}$ மணிக்கு தலைவர் தோழர் என். கே. கருப்பண்ண அவர்கள் தலைமையில் கூடி டை சங்கத்திற்குமெம்பர்களைச் சேர்க்கவும் நன்கொடை வசூல் செய்யவும் வேண்டும் என்றும், திராவிடநாட்டில் திராவிட ஆட்சி ஏற்பட்ட காலத்தில் நடத்தவேண்டிய ஆட்சி முறைகளையும் திட்டங்களையும் நடக்கப்போகும் மாகாண மாநாட்டில் கிளப்பிக்கும்படி டைமாகாண மாநாட்டை வற்புறுத்துவ (திட்டம் சேலம் மாகாண மாநாட்டுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது) தாகவும் தீர்மானிக்கப்பட்டது.

## தமிழ்நாடு ஜவுளி வர்த்தகர் சங்கம்

மைசூர்: 1-8-44-ஆம் தேதி தமிழ்நாடு ஜவுளி வர்த்தகர்களின் பொதுக் கூட்டம் மைசூர் சிவனார்பேட்டை தோழர் என். ஆர். பசுவய்ய செட்டியார் அவர்கள் கடையில், கொரநாடு தோழர் ஏ. எஸ். சுப்ரமண்யம் செட்டியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தமிழ்நாடு ஜவுளி வர்த்தகர்சங்கம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. தோழர் பி. பி. வீரய்ய பண்டாரம் அவர்களை தலைவராகவும், தோழர் பி. நீலகிரி செட்டியார் அவர்களை காரியதரிசியாகவும் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

## சென்னை புரசைத் திருவள்ளுவர் கழகம்

ஞாயிறு தோறும் சொற்பொழிவுகள்

இக்கழகத்தின் சார்பில், சென்னை புரசவாக்கம், வைக்கோற்காரன் தெரு, பள்ளிக்கூடத்தில், திரிசிரபுரம், தமிழ்மறைத் தொண்டர் குறள்—வி. முனிசுவாமிப்பிள்ளை, பி. ஏ. அவர்களால் ஞாயிறு தோறும் காலை 11-மணி முதல் 12-வரை திருக்குறள் விரிவுரைகள் நடைபெறும்.

27-8-44 ஞாயிறு முதல் ஆரம்பம்.

## சேலம் தமிழர் சங்கம்

ஜஸ்டிஸ் தமிழர் சங்கம் அம்மாப்பேட்டை சேலம்: டை சங்கத்தின் கூட்டம் 29-8-44ஆம் தேதியில் டை சங்கத் தலைவர் எ. முருகேசமுதலியார் வீட்டில் இரவு 8-மணிக்கு கூடும். அன்று சங்கத்தின் கட்டிட தகராறு விஷயமாயும் மற்ற பொது விஷயமாயும் பேசி யோசிக்கப்படும். ஆகையால் அங்கத்தினர்கள் அவசியம் வந்து தங்கள் அபிப்பிராயத்தை தெரியப்படுத்த வேணுமாய் கோரப்படுகிறது என காரியதரிசி வை. பெருமாள் முதலியார் தெரிவிக்கிறார்.

## நெல்லை தாழ்த்தப்பட்டோர் மாநாடு

நெல்லை மாவட்ட தாழ்த்தப்பட்டோர் 17-வது மாநாடு இம்மாதம் நடத்துவதாக அறிக்கையிடப்பட்டிருந்தது. ஆனால் தற்கால அரசியல் முக்கியத்துவத்தைக் கருதி செப்டம்பர் இறுதியில் நடத்துவதென முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

## மோட்டார் தொழிலாளர் சங்கம்

தென்னார்க்காடு ஜில்லா மோட்டார் தொழிலாளர் சங்கத் திறப்புவிழா 14-8-44ல் திருப்பாப்புலியூரில் தோழர் சென்னை வி. சக்கரை செட்டியார் தலைமையில் கொண்டாடப்பட்டது. தோழர் எம். என். முத்துக்குமாரசாமிப் பாவலர் தொழிலாளர் கொடியை உயர்த்தினார். தோழர் எம். என். முத்துக்குமாரசாமிப் பாவலரைத் தலைவராகக் கொண்ட டை ஜில்லா மோட்டார் தொழிலாளர் சங்கம் ஒன்று நிறுவப்பட்டது.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

## ஓமலூர் மாநாடு

### நிறைவேறிய தீர்மானங்கள்

சங்ககிரி நகரத்தில் 22-7-44ல் தோழர் ந. அர்ச்சுனன் (இளையகுமார பட்டக்காரர்) அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஓமலூர் தாலுகா திராவிட இளைஞர் மாநாட்டில், திராவிடநாடு பிரிவினையை ஆதரித்தும், தெ. இ. ந. உ. சங்கத்தையும் (ஜஸ்டிஸ் கட்சியையும்) திராவிட கழகத்தையும் ஒன்றாக இணைத்து திராவிடர் கழகம் என்று பெயரிட்டு பிரிவினைக்கு பாடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்வதாகவும், திராவிடநாட்டிலுள்ள முதலாளிகள் முன்வந்து பெருந் தொழிற்சாலைகளை நிறுவவேண்டுமென்றும், திராவிடர்களையும் திராவிடர் கலையையும் இழிவுபடுத்தும் யாவற்றையும் அழிக்கவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

## யூனியன் போர்டு தேர்தல்

ஆலங்குடியில் 30-7-44ல் நடைபெற்ற யூனியன்போர்டு தேர்தலில் சுயமரியாதை இயக்கத் தோழர் எஸ். பாலசெங்கரதரன் பெருவாரியான ஓட்டுகளினால் வெற்றியடைந்தார்.

வெற்றி அடைந்த தோழரை பாராட்டி பலர் பேசினார்கள்.

## நினைவுநாள்

பாளையங்கோட்டை: தோழர் எஸ். டி. பாப்பா அவர்களின் தந்தையார் தோழர் சோ. சிவஞான தேசிகரின் நினைவுநாள் 18-8-44ந் தேதியன்று வெள்ளிக்கோவில் தோப்பில் கொண்டாடப்பட்டது.

## பெங்களூரில் சீர்திருத்த காலட்சேபம்

13-8-44-ந் தேதி குளைவிலுள்ள ராவ்பகதூர் பி. வி. வெங்கடசாமி நாயுடு அவர்களின் சத்திரத்தில் தோழர் சுபதார் ஆர். சண்முகம் அவர்களின் நினைவைக் குறித்து நடைபெற்ற நீத்தார் நினைவு நாள் கூட்டத்தில் தோழர் பூ. பார்த்தசாரதி அவர்கள் 'எனது கனவு' என்னும் ஓர் காலட்சேபத்தை சீர்திருத்த முறையில் நடத்தி வைத்தார். மேற்படி நினைவு நாளைக் குறித்து "குடி அரசு" பத்திரிகைக்கு ரூபாய் ஒன்று நன்கொடையாக அளிக்கப்பட்டது.

## திராவிட ஆசிரியர் கழகம்

திருநெல்வேலி: ஷை கழகத்தின் மாதாந்திரக் கூட்டம் 12-8-44ல் தோழர் சுப்பிரமணியன் பி. ஏ. எல். டி., தலைமையில் நடைபெற்றது. தோழர் ஏ. வி. மூத்தையா, வித்வான் சேதுரகுநாதன், துரைசாமி பிள்ளை எம். ஏ. எல். டி, முதலியவர்கள் பேசினார்கள். சங்கீத சிரோமணி பாடத்திட்டத்தில் தமிழ் நாட்டினர் அறிஞர்களைத் தலைதக எடுக்கும் [illegible] தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## அறிவிப்பு

1-8-44 முதல் 'குடி அரசு' பத்திரிகைக்கு இலங்கை முழுவதற்கும் சோல் ஏஜெண்டாக Messrs A. K. Devadason and Co, யாரை நியமித்திருக்கிறோம்.

மானேஜர்.

* *

'குடி அரசு பத்திரிகைகள் விற்பனை செய்வதற்கு இலங்கை முழுவதற்கும் சப் ஏஜண்டுகள் தேவை. 15 சதம் முத்திரைகளுடன் விண்ணப்பித்துக் கொள்ளவும்,

ஏ. கே. தேவதாசன் அண்கோ, 'குடி அரசு' சோல் ஏஜண்டு, நெ. 90 சென்ட் மைக்கேல் ரோடு, கொள்ளுப்பிட்டி கொழும்பு.

## அநுதாபம்

நான்குநேரி தாலூகா ஆ. தி. மகாஜன சங்க காரியதரிசி தோழர் இ. வி. பெரியசுவாமியின் மகவு இறக்கை எய்தியமைக்கு வருந்துவதுடன் ஷை யாருக்கு தங்கள் ஆழ்ந்த அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதாக பம்பாய் நா. தா. ஆ தி. ம. சங்கத்தார் எழுதுகிறார்கள்.

## மறைவு

நாமக்கல் ஷாப்புக்கடை தோழர் ஆர் முனுசாமி நாயுடு குமாரர் தோழர் எம். கிருஷ்ணசாமி நாயுடு தமது 52 வது வயதில் 8-8-44-ல் இயற்கையடைந்தார்.

## நீத்தார் கடன்

திருச்சி லால்குடி தாலூகா நன்னிமங்கலம் திராவிடர் வாலிபர் கழகம் காரியதரிசியின் பாட்டியாகிய சம்பத்தடியான் மனைவி ஸ்ரீரங்காய் அம்மாள் இயற்கை எய்தினார். ஷையாருக்கு 27-8-44ல் நீத்தார் கடன் நடைபெறும் என்று இராமசாமி எழுதுகிறார்.

* *

காபிர்தண்டவம் தோழர் வீரா. அருணாசல முதலியார் புதல்வன் திருமணத்தை முன்னிட்டு 'குடி அரசு' வளர்ச்சிக்காக ரூ. 2 நன்கொடையளிக்கப்பட்டது.

* *

19-7-44ல் நடைபெற்ற சிவகங்கை மருத்துவகுல சங்க முதலாவது ஆண்டு விழாவின் நினைவாக 'குடி அரசு' வளர்ச்சிக்காக ரூ. 1 நன்கொடையளிக்கப்பட்டது.

* *

28-7-44ல் நடைபெற்ற கொழும்பு தமிழ் நாடு அருந்ததியார் சமூக ஊழியர் சங்கத் தலைவர் தோழர் கு. க. பிச்சையாவுக்கும் தோழர் ஈசுவரியம்மாளுக்கும் பிறந்த ஆண்மகவுக்கு நடராஜன் எனப் பெயரிடப்பட்டது. இதன் நினைவாக 'குடி அரசு'க்கு ரூ. 1 நன்கொடையளிக்கப்பட்டது.

ஷை சங்கக் கமிட்டி மெம்பர் தோழர் ஆ. மு. பலவேசத்திற்கும் தோழர் செல்லம்மாளுக்கும் 25-6-44 பிறந்த பெண் மகவுக்கு 'சந்திரோதயம்' என்ற பெயரிடப்பட்டு 'குடி அரசு'க்கு ரூ. 1 நன்கொடையளிக்கப்பட்டது.

* *

தஞ்சை: 18-8-44ல் இராவ்சாகிப் ஐ. குமாரசாமி பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்ற தஞ்சை ஜில்லா முதலாவது மருத்துவர் மாநாட்டில், சிதம்பரம் டாக்டர் டி. நாகப்பன் அவர்கள் கொடியேற்றுவித்தார். தோழர் டி. ஜி. சங்கர் மாநாட்டைத் திறந்து வைத்தார். தோழர் என். என். ஆனந்தம் அவர்களின் படத்தை டாக்டர் ஆர். பாலகிருஷ்ணன் திறந்துவைத்தார். இச் சமூகத்தை இழிவாகக் கருதி சேவைசெய்ய முன் வராத மேளக்கார சமூகத்தினரை பட்டவர்த்தனமாக பிரகாரிப்பதென இம்மாநாடு அழுத்தமாக முடிவு செய்கிறது என்று தீர்மானிக்கப்பட்டது.

* *

ஊத்தநாடு: இத்தாலூகா யுத்த பிரசாரகர் தோழர் ஆறுமுகம் அவர்களின் அன்னை தோழர் செங்கையம்மையார் 6-8-44ல் இயற்கையெய்தினார். 22-8-44 தேதி அன்னாரின் இறுதிக்கடன் காரியத்தைப் புலவர் தோழர் அ. சங்கசாமி தலைமையில் நடந்தது. தோழர்கள் நடேசன், குழந்தையா முதலியோர் சொற்பொழிவாற்றினார்கள். இதன் நினைவாக திராவிடநாடு, குடி அரசு முதலிய பத்திரிகைகளுக்கு முறையே ரூ. 1 நன்கொடையளிக்கப்பட்டது.

* *

கோனாபட்டு: காரைக்குடி 'குமரன்' துணை ஆசிரியராகச் செல்லும் தோழர் முருகு. சுப்பிரமணியம் அவர்களைப் பாராட்டி 20-8-44ல் தோழர் விசு. திருநாவுக்கரசு தலைமையில் நடந்த கூட்டத்தில் பலர் அன்னாரைப்பாராட்டிப் பேசினர். பல சங்கங்கள் வாழ்த்திதழ் வாசித்தளித்தன.

* *

கொழும்பு: திருநெல்வேலி ஜில்லா ஆதிதிராவிட மகாஜன சங்கத் (இலங்கைக்கிளை) தின் தலைவர் தோழர் எ. பி. ஈனமுத்துவும் பொக்கிஷதார் தோழர் டி. பட்டமுத்துவும் இந்தியா செல்லுவதை முன்னிட்டு 11-8-44ல் ஓர் பாராட்டுக்கூட்டம் தோழர் எஸ். ஜான் செல்லையா தலைமையில் நடைபெற்றது.

ஷை சங்கத்தின் 3வது வருடத்தின் அங்கத்தினர் கூட்டம் 10-8-44ல் தோழர் ஈனமுத்து தலைமையில் நடந்தது. 1944-45 ஆம் வருடத்திற்கு தோழர் எஸ். ஜான் செல்லையா அவர்களைத் தலைவராகக் கொண்ட ஒரு நிர்வாகக் குழு தெரிந்தெடுக்கப்பட்டது.

(4ம் பக்கத் தொடர்ச்சி)

படி ஆதிக்கம் செலுத்த முடியும்? தெலுங்கர்களிடையே வாழும் தமிழர்கள் வெகு சோர்ந்தே.

தமிழ்மொழியை தாய்மொழியாகக் கொண்டவர்கள் அம்மொழியிலுள்ள பாடல்களை அர்த்தம் செய்துகொண்டு, நன்கு அநுபவிப்பதற்காகவே தமிழ் இசை இயக்கம் ஆரம்பமாயிற்று. இதையும் தெலுங்கர்கள் தப்பர்த்தம் செய்து கொண்டு விட்டார்கள். தமிழறிந்தவன் தமிழ்ப் பாடல்களையே ரஸிப்பான்; அநுபவிப்பான்; பாடல்களில் ராகம் எவ்வளவு அவசியமோ அதேபோல்தான் வார்த்தைகளின் அர்த்தங்களும். கூடிய விரைவில் தெலுங்கர்களும் தம் பாஷைப் பாடல்களையே பாட வற்புறுத்துவது அவசியமென்று கூறுகிறேன்.

ஜமீன்தாரி சட்டசம்பந்தமாக காங்கரஸ் அதிகாரத்திலிருந்தபோது வந்த யோசனைகளையும் மசோதாவையும் மந்திரிகள் ஏற்றுக்கொள்ளவில்லை. அதனால் தெலுங்கர் கோருவதை அவர்கள் நிறைவேற்ற மறுத்துவிட்டனர் என்ற புகார் வெளிவந்துள்ளது. இந்த மசோதாவை ஜாக்கிரதையாக பரிசீலனை செய்ததன்பேரில் இதில் ஒருவித நன்மையும் இல்லை என்று தெரிந்ததால் இதை ஏற்றுக்கொள்ள முடியாமல் போயிற்றே தவிர தெலுங்கர்கள் நன்மை அடையக் கூடாது என்ற எண்ணத்துடன் அது செய்யப்படவில்லை. அந்த மசோதாவை ஏற்று சட்டமாக்கியிருந்தால், வழக்குகள் அதிகரித்து பிராமண வக்கீல்கள் வயிறு நிறைவதையே நாம் பார்க்க நேரிடும். இது ஒரு சாராரின் நன்மைக்காகவே கொண்டுவரப்பட்டது.

திராவிடஸ்தான் பிரச்சினை ஆதிகாலத்திலிருந்தே வந்துகொண்டிருக்கிறது. அதை ஜஸ்டிஸ்கட்சியார் கிளப்பி வந்தனர். இதை மறைக்கவும், மறக்கவும் முடியாது. எவ்வளவுக்கெவ்வளவு உதாசீனமாக நினைக்கப்படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு சிக்கலான, பெரிய விஷயமாக இது மாறிக்கொண்டே போய்விடும். இதை உதறித் தள்ளுவதால் பிரயோஜனமொன்றும் ஏற்பட்டு விடாது. ஆகையால் காங்கரஸ்காரர்களை நான் கேட்டுக் கொள்ளுகிறேன். அவர்கள் சமரச நோக்கத்துடன் இவ்விஷயத்தைப் பரிசீலனை செய்து விவாதித்து பிறகு முடிவுக்கு வரட்டும்; இதனால் நன்மையே ஏற்படும். திராவிடஸ்தான் பிரச்சினைக்கு ஆதாரம் பல உண்டு. எவ்வளவு வக்கீல்கள் ஐ. சி. எஸ். காரர்கள் பிராமணர்களாக இருக்கிறார்கள்! என்ன வயிற்றெரிச்சல்! 100-க்கு 75 பேர்களாக இருக்கிறார்கள்! நாளடைவில் இச்சிறுபான்மையோர்கள் நம்மை உறிஞ்சிவிடுவார்கள் போல் தோன்றுகிறது. [illegible] கோஷம் கேளுங்கள், கேளுங்கள்.)

சிலர் இவர்களை புத்திசாலிகள், பிறவிப் புத்திசாலிகள் என்று சுலபமாகக் கூறிவிடுகிறார்கள். இது ரொம்ப முட்டாள்தனமானது.

இந்த யுத்தம் ஹிட்லரையும், அவர் கொள்கைகளையும் ஒழித்திடவே நடக்கிறது. இந்த யுத்த முடிவில் அவைகள் ஒழிந்து போய்விடுமானால் நாம் நம்மிடையே உள்ள இந்த ஹிட்லர்களை ஒழித்து அவர்கள் அதிகாரங்களையும், ஆதிக்கத்தையும் மறையச் செய்யவேண்டும். இவைகளை ஒழித்திட நாம்போர் புரியவேண்டும், வெற்றிபெறவேண்டும். மேம்பட்ட ஜெர்மானியர் என்று கூறிக்கொண்டு ஹிட்லர் ஆரம்பித்த அட்டகாசம் ஒடுங்குவதுபோல், இந்த பிராமணர்களும் ஒடுக்கப்பட வேண்டும் (கரகோஷம்)!

காலம் வேகமாக மாறிக்கொண்டிருக்கிறது. சென்ற தேர்தலின் போது ஜஸ்டிஸ் கட்சி தோற்றதுபோல் இப்பொழுது ஏற்படாது; இப்பொழுது தேர்தல் நடந்தால் காங்கரஸ் தோற்று ஜஸ்டிஸ் கட்சி ஜெயித்துவிடும் என்றுதான் இன்று சொல்கிறேன் (கரகோஷம்). இதற்குக் காரணம் பொதுஜனங்களிடையே ஏற்பட்டுள்ள கிளர்ச்சியும் உண்மையை உணரும் திறமையுமே ஆகும். நெருக்கடியான சமயத்தில் தேசத்திற்கு சேவை செய்வதற்கு பதில் மந்திரி பதவியிலிருந்து காங்கரஸ்காரர்கள் விலகியதை அவர்கள் அறிவார்கள். இனிமேல் யார் தங்களுக்கு சேவை செய்வார்களோ அவர்களையே தேர்ந்தெடுப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. கூச்சலினாலும், கூக்குரலினாலும் ஒன்றையும் அடைந்துவிட முடியாது என்பதை அவர்கள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள்.

மகாத்மா-ஜின்னா சந்திப்பால் ஒன்றும் ஏற்பட்டுவிடாது என்று சிலர் சொல்லுகிறார்கள். இதை நான் ஒப்புக் கொள்ளமாட்டேன். இந்தச் சந்திப்பால் ஏதோ சில நன்மைகள் ஏற்படும் என்று எனக்குத் தோன்றுகிறது. இந்தியர் முன்னேற்றமடைய அநேக பிரச்சினைகளில் பாக்கிஸ்தான் ஒன்று.

நான் ஜஸ்டிஸ் கட்சியில் சேரவில்லை. ஆனால், காங்கரஸ்காரர்கள் அநுதாபத்துடனும், சிநேக பாவத்துடனும் விஷயங்களை பரிசீலனை செய்து, ஜனங்கள் விரும்புவதைச் செய்து முடிக்க வேண்டுமென்றேதான் இஷ்டப்படுகிறேன். பிராமணர்—பிராமணரல்லாதார் பிரச்னை இருக்கிறது, இதை மறைப்பதில் பயனில்லை, அதை தீர்த்தே ஆகவேண்டும்.

பிறகு டாக்டர் கிருஷ்ணசாமி முடிவுரையாக பேசினார்; 'திராவிடஸ்தான் கோரிக்கை மறுக்க முடியாதது. அதை எவ்வளவு [illegible] ஒப்புக்கொள்ளுகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு நல்லது. சச்சரவு முற்றாமல் ஆரம்பத்திலேயே தீர்த்து விடுவது தான் புத்திசாலித்தனம். இது பிற்காலத்தில் ஒவ்வொரு வகுப்பினரின் சிநேக, சமூக சம்பந்தத்தை வளர்க்க உதவும். இல்லையேல் நிலைமை மோசமாகி கேவலமடைந்துவிடும். வெவ்வேறு வகுப்பினரின் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளுவதே சிலாக்கியமானது. பாகிஸ்தான் ஒரு சாரார் விரும்புவதைக் கொடுப்பதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்டால், அதேபோல் நியாயமாக மற்றொருசாரார் கோரும் உரிமைகளை எப்படி உதறித் தள்ளிவிட முடியும்? வடக்கில் பாகிஸ்தான் வாழவேண்டுமானால் தெற்கில் திராவிடஸ்தான் ஏற்படவேண்டும். திராவிடஸ்தான் இல்லாமல் பாகிஸ்தான் மட்டும் வாழ்ந்துவிட முடியாது. பாகிஸ்தானுக்கும் திராவிடஸ்தானுக்கும் உடன்படிக்கை ஏற்பட்டு இரண்டும் வளரும் என்பதே என் நம்பிக்கை.

ஜமீன்தாரி சட்ட சம்பந்தமாக தோழர் ராமநாதன் சொல்லியவை பலரின் சந்தேகங்களை நிவர்த்தித்து விட்டன. விவசாயிகளுக்கு விரோதிகள் யாரென்பதை அவர் விளக்கி, அது எந்த எண்ணத்தின் மேல் கொண்டுவரப்பட்டது என்பதை வெட்ட வெளிச்சமாக்கி விட்டார்.'


இரோட்டில்

## 'நந்தனார்'

**3-9-44ல்**

ஈரோடு, பார்க்பிக்சர் பாலஸ் தியேட்டரில், (டவுன் டாக்கிஸில்)
"கோவை மாவட்ட திராவிடர் கழகக் கட்டட நிதிக்காக,
கலைச்சுவை அரசர், தோழர்

**N. S. கிருஷ்ணன்**

அவர்களால்

**"நந்தனார்" காலட்சேபம்**

பெரியார் தலைமையில் நடைபெறும்.
தோழர் சி. என். அண்ணாதுரை அவர்களும் கலந்துகொள்வார்.

என். அர்சுனன்,
கோவை மாவட்ட திராவிடர் கழகத் தலைவர்.

பெ. பழனிச்சாமி,
எஸ். ஆர். சந்தானம்,
செயலாளர்கள்.

குறிப்பு:- வெளியூர் வாசிகள் முதல் வகுப்பு டிக்கட் கட்டணத்தை முன்பணமாக அனுப்பி வைத்தால் இடம் ரிசர்வ் செய்து வைக்கப்படும்

விலாசம்: எஸ். ஆர். சந்தானம்,
எஸ். ஆர். மண்டி, ஈரோடு.

(2ம் பக்கத் தொடர்ச்சி)

களையும், சங்கீத இயக்கங்களையும் கண்டிக்கிறார்களே ஒழிய தெலுங்கு சங்கீதத்தின் மீது குறை கூறவோ கண்டிக்கவோ இல்லை. சங்கீதத்தை பாண்டித்தியம் என்றும், கலையென்றும் சொல்லி வருவதைத்தான் கண்டிக்கிறார்கள். சங்கீதம் விரும்பாதவர் எவரும் இல்லை. பறவைகள் பாடுகின்றன. நீங்கள் அதைக்கேட்டு ஆனந்திக்கிறீர்கள். அதுபோல பறவைகளும் ஆனந்திக்கின்றன. மிருகங்களும் சங்கீதத்தை ரசிக்கின்றன. மனிதனும் சங்கீதத்தை ரசிப்பவன்தான். ஆனால், அத்தகைய சங்கீதத்தைத்தான் 'சங்கீதப் பண்டிதர்கள்' நமக்கு அளிக்க மறுக்கிறார்கள். நாம் விரும்பாத-பயன் பெறாத சங்கீதத்தை நம்மிடையே திணிக்கிறார்கள். பாமரமக்கள் சங்கீதத்திற்கு தவிக்கிறார்கள்; ஆனால் அவர்களுக்குக் கிடைப்பதில்லை. அவர்கள் புரியப் படுவதாக விளங்கிக் கொள்கிற சங்கீதத்தை விரும்புகிறார்கள். எனவே, தமிழிசை இயக்கம் ஜனநாயகத்திற்காக போராடுகிறது.

## வேலை தேடித்தரும் நிலையங்கள்

டில்லி: யுத்தத்திற்குப் பிறகு வேலையற்றுப்போகக்கூடிய தொழிலாளர்களை ரெஜிஸ்டர் செய்து வைத்துஅவர்களுக்கு வேலை தேடிக்கொடுப்பதற்காக ஒரு ஸ்தாபனம் அமைக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் பம்பாய், கல்கத்தா, கான்பூர், சென்னை ஆகிய இடங்களில் இவ்வருஷ ஆரம்பத்தில் அமைக்கப்பட்ட வேலை தேடும் நிலையங்கள் ஆயிரத்துக்கு மேற்பட்ட தொழிலாளர்களுக்கு வேலை சம்பாதித்துக் கொடுத்திருக்கின்றன.

ஜூன் மாதம் முடிவு வரையில் பம்பாய் நிலையம் மொத்தம் 1981 பேரைப் பதிவு செய்து 819 பேருக்கு வேலை தேடிக்கொடுத்திருக்கிறது. கான்பூர் நிலையத்தில் முதலாளிகள் தொழிலாளிகளின் பிரதிநிதிகளடங்கிய கமிட்டியொன்றும் சேர்க்கப்பட்டிருக்கிறது. அங்கே ஜூன் மாத முடிவு வரை 706 பேர் பதிவு செய்யப்பட்டன; 79 பேருக்கு வேலை கிடைத்திருக்கிறது.

சென்னையில் உள்ள நிலையம் முழு நேர மானேஜர் ஒருவரால் நடத்தப்படுகிறது. அங்கேயும் கமிட்டி ஒன்று இருக்கிறது. 1944 ஜனவரியில் 75 பேரோடு ஆரம்பித்த இந்த நிலையத்தில் ஜூன் மாத முடிவில் 474 பேர் பதிவாகியிருந்தனர். இவர்களில் 78 பேருக்கு வேலை தேடிக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

## சென்னை தமிழ் இசைச் சங்கம்
### வேண்டுகோள்

கௌரவ காரியதரிசி இராவ்சாகிப் டி. எஸ். கச்சாபிகேச முதலியார் எழுதுவதாவது:-

அண்மையில் சென்னைப் பல்கலைக் கழகத்தினர் சங்கீத சிரோமணி என்ற புதிய இசை வகுப்பு ஒன்று ஏற்படுத்தி உள்ளனர். அவ்வகுப்பிற்கென்று வகுத்துள்ள பாடதிட்டத்தில் 66 பாடல்கள் உள்ளன. அவற்றுள் 64 பாடல்கள் தெலுங்கும், 2 பாடல்கள் தமிழுமாக ஏற்படுத்தி இருக்கின்றனர். இது மட்டுமல்ல, மேற்படி பல்கலைக் கழகத்தினர் முன்னரே இன்டர் மீடியட், பி. ஏ., வகுப்புகளுக்கும் சங்கீத பாடதிட்டம் வகுத்திருக்கின்றனர். ஒவ்வொரு வகுப்பிற்கும் இருபது இருபது பாடல்கள் அமைத்திருக்கின்றனர். அந்த 40 பாடல்கள் அனைத்தும் தெலுங்குப் பாடல்களே!

பொது நிலையிலுள்ள ஒரு பல்கலைக் கழகம் இத்தகைய செயல்களை—முறைகளை மேற்கொண்டது பொருத்தமல்ல. அதனோடு சென்னைப் பல்கலைக் கழகத்தின் முதன்மையான கடமை தமிழர்கட்குப் பணி செய்வதாகும். ஏனெனில் ஆந்திரர்களுக்கும், கேரளர்களுக்கும் அவரவர் கலைகளை வளர்ப்பதற்கெனத் தனித்தனியாகப் பல்கலைக் கழகங்கள் ஏற்பட்டுள்ளன. ஆகவே, சென்னைப் பல்கலைக் கழகம் ஒன்று தமிழுக்கு அதிகமாக இடமளிக்கும் முறையில் அப்பாடதிட்டங்களைத் திருத்தட்டும். அல்லது முழுமையும் தமிழ்ப் பாடல்களாக உள்ள பாடதிட்டங்களை வகுத்து, புதிய தமிழிசை வகுப்புகளை (courses) ஏற்படுத்தட்டும்.

ஆகவே, இதனைக் கண்ணுறும் தமிழ்ப் பெருமக்கள் பெருங்கிளர்ச்சி செய்து, செய்திகளை மக்களுக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் எடுத்துக் கூறுவார்களாக!

## தோல் பதனிடும் தொழிலாளர் சங்கம்

வாணியம்பாடி, ஓதியந்திரம் வடஆற்காடு ஜில்லா தோல் பதனிடும் தொழிலாளர் சங்கக் காரியக்கமிட்டிக் கூட்டம் 10-8-44ல் வாணியம்பாடி கோணாமேடு எயிடட் எலிமெண்டரி பாடசாலையில் டாக்டர் இ. சுப்ரமண்யம் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் தொழிலாளர்களுக்கு சம்பளம் ரூ. 15ம் யுத்தப்படி ரூ. 10ம் கொடுக்கவேண்டுமென்றும் செப்டம்பர் முதல் தேதிக்குள் கவனிக்கப்படவேண்டும் என்றும் தேசிய சர்க்கார் அமைக்கப்பட்டால் தாழ்த்தப்பட்ட தலைவர்களையும் கலந்து யோசிக்க வேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## 'திராவிடர்' சொல் இழிவானதா?
### விருதையில் விவாதம்

விருதுநகர்: "திராவிடர் என்ற பதம் இழிவானதா? இல்லையா" என்னும் பொருள்பற்றி மதுரையில் நடக்கவிருந்த சொற்போர் இடைசதி பிள்ளையால் விருதுநகர் என். பி. எஸ். ஹாலில் 13ல மாலை 4-மணிக்கு சரித்திராசிரியர் தோழர் ஜெ. எ. துரைராஜ் பி. ஏ. எல். டி., தமிழ்ப் புலவர் தோழர் கண்ணாயிரம் ஆகியோர் முன்னிலையில் நடந்தது.

'திராவிடர் என்ற சொல் இழிவானதென்று தோழர்கள் செங்குட்டுவன், வேங்கை மார்பன், இளம்பெருவழுதி, மதிவாணன், மு. இராமலிங்கம் முதலியோர் பேசினர். அதை எதிர்த்து தோழர்கள் பாஸ்கரன், சோமசுந்திரம், தெய்வநாயகம், ஜெகதீசன், ஆசைத்தம்பி, சுதந்திரசாமி ஆகியோர் பேசினர்.

## வேண்டுகோள்

பட்டுக்கோட்டை சுயமரியாதை சங்கத்திற்கு ஓர் கட்டிடம் கட்டவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டு, பல அன்பர்களின் ஆதரவில் கட்டிடம் கட்டுவதற்கான ஆரம்ப வேலைகள் நடைபெற்று வருகின்றது. வெளியூரில், டை கட்டிடநிதி வசூலுக்கு தோழர்கள் கே. எஸ். சிவராமகிருஷ்ணன், பி. மாப்பிள்ளையன், என். ரெத்தினசாமி ஆகியோர் கூடிய சீக்கிரம் சுற்றுப்பிரயாணம் செய்வார்கள். தோழர்கள் யாவரும் தங்களால் இயன்ற பொருளுதவி செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் என டை சங்கத்தலைவர் தெரிவிக்கிறார்.

## திருச்சி சுயமரியாதை மாநாடு
### வரவு செலவு

16-7-44-ந்தேதி நடைபெற்ற திருச்சி மாவட்ட சுயமரியாதை மாநாட்டு மொத்த வரவு செலவு வருமாறு:-

| | |
|---|---|
| நன்கொடை வரவு ரூ. | 179-4-0 |
| செலவு மொத்த ரூ. | 132-12-0 |
| மீதி இருப்பு ரூ. | 46-8-0 |

இந்த மீதித் தொகை தோழர் கனைமான் வசம் இருக்கிறது என வரவேற்புக் கழகத்தார் தெரிவிக்கிறார்கள்.

## பிறப்பு

மம்பாய் தாராவி 'குடி அரசு' ஏஜண்டு தோழர் எஸ். பெரியசுவாமி அவர்களின் சகோதரர் தோழர் எஸ். சுப்பையாவின் மனைவி தோழர் பாலம்மாளுக்கு 25-7-44ல் ஒரு ஆண் மகவு பிறந்தது. அக்குழந்தைக்கு 12-8-44ல் 'சாந்தமணி நாதன்' என பெயரிடப்பட்டது. தாயும் சேயும் சுகமாக யிருக்கின்றனர். இதன் நினைவாக குடி அரசு வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடையளிக்கப்பட்டது.

## மருத்துவர்களுக்கு வேண்டுகோள்

மண்ணச்சநல்லூர் தோழர் இ. மாணிக்கம் விடுத்துள்ள வேண்டுகோளில் சென்னை மாகாண மருத்துவர் கமிட்டி ஒன்று நிறுவ வேலை செய்யவேண்டியிருப்பதால், எல்லா சங்கங்களும், சங்கங்களின் விலாசத்தையும் அங்கத்தினர்களில் 1,2,3 பேர்களுக்குமேல் அவர்கள் பெயரையும் விலாசத்தையும் இ. மாணிக்கம், வி. பெருமாள், மாகாண கமிட்டி கன்வீனர்கள் மண்ணச்சநல்லூர், திருச்சி என்ற விலாசத்திற்கு எழுதியனுப்ப வேண்டும் என்று கேட்டிருக்கிறார்.

## திராவிட ஏழை மாணவர் கல்வி உதவி நிதி

சாக்கோட்டை: இவ்வூரிலுள்ள சுயமரியாதைச் சமதர்ம சங்கத்தின் ஆதரவில் மேற்படி நிதியின் ஆரம்ப விழா 13-8-44 மாலை 6½ மணிக்கு கும்பகோணம் தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் தலைமையில் சாக்கோட்டையில் நடைபெற்றது. கும்பகோணம் தோழர் வி. சின்னத்தம்பி அவர்கள் இவ்விழாவை ஆரம்பித்து வைத்தார். தோழர்கள் டி. முத்துகிருஷ்ண நாயுடு, டாக்டர் வி. பசுபதி எல். ஐ. எம்., கே. சல்லப்பன், பி. ஆர். பொன்னுசாமி, எஸ். ஆர். சாமி ஆகியவர்கள் இந்நிதியின் அவசியத்தைக் குறித்து சொற்பொழிவாற்றினார்கள். கூட்டத்தில் ரூ. 125-க்கு வாக்களிக்கப்பட்டது. நிதி சம்பந்தமாக பல தீர்மானங்களும், இந்நிதியை நிர்வகிக்க ஒரு மானேஜிங் போர்டும் ஏற்படுத்தப்பட்டது.

## தாழ்த்தப்பட்டோர் கிளர்ச்சி

இன்று இந்திய அரசியல் உலகம் கொந்தளிப்பிலிருக்கிறது. தாழ்த்தப்பட்டோரும் துடிதுடிக்கின்றனர். சென்னையிலுள்ள சென்னை ஆதிதிராவிட தொண்டர்படை, ஆதிதிராவிட இளைஞர் கழகம், சென்னை ஆதிதிராவிட பொதுமக்கள் சங்கம் என்பவைகள் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கின்றன.

"இதுவரையில் முஸ்லிம்களின் பெருமையையும் உரிமையையும் காங்கரஸ்காரரால் உணரும் காலம் முடிந்து இதற்கடுத்துள்ள மைனாரிட்டிகளாகிய நம்முடைய பெருமையையும் உரிமையையும் உணரும் காலம் வந்திருக்கிறது" என்று அவ்வறிக்கையில் குறிப்பிட்டு விட்டு இப்பிரச்சினை தீருவதற்கு தேசிய சபையும், சமுதாய சட்டசபையையும் திறவினால்தான் முடியும் என்பதாகவும் அவைகளை எவ்வாறு திறவுவது என்பதுபற்றியும் யோசனைகள் கூறப்பட்டிருக்கிறது.

## குடந்தை திராவிட மாணவர் கழகம்

குடந்தை: 13-8-44ல் தோழர் மீனாட்சி சுந்தரம் எம். ஏ., (கரந்தைப் புலவர் கல்லூரி தலைவர்) அவர்கள் தலைமையில் மேற்படி கழகத்தின் முதல் சிறப்புக்கூட்டம் நடந்தது. 10 வயது வீரமணி, தோழர்கள் ஏ. பி ஜனார்த்தனம் பி. ஏ, திராவிடமணி பி. ஏ., முதலியவர்கள் பேசினார்கள். பின்னர் சென்னை பல்கலைக் கழகத்தாரால், "Assistant Lecturer in Languages other than English" என்ற பதவியை குடந்தையில் வடமொழி ஆசிரியர்களுக்கே கொடுக்கப்பட்டு வருவதை மாற்றி தமிழாசிரியருக்கும் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டும், சென்னை பல்கலைக்கழகத்தாரால் சிரோமணி வகுப்புக்கு 66 பாடலில் 64 தெலுங்குப் பாடல்களை வகுத்திருப்பதைக் கண்டித்தும், தஞ்சை மாவட்ட நாட்டாண்மை பாடப்பகுதித் தொகுப்புக்குழுவினர், உயர்நிலைப்பள்ளியில் 5-வது பாரம் பாடப்பகுதியிலிருந்து கவிஞர் பாரதிதாசன் அவர்கள் பாடலை நீக்கியிருப்பதைக் கண்டு வருந்துவதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

* *

குடந்தை பிராமணரல்லாத இளைஞர் கழகத்தின் தொடக்கவிழா தோழர் பி. ஆர். பொன்னுசாமி சேர்வை தலைமையில் நடைபெற்றது. 10 வயது வீரமணியும், தோழர் ஏ. பி ஜனார்த்தனம் பி.ஏ., அவர்கள் பேசினார்கள். தோழர் எஸ். தவமணிராசன் நன்றி கூறினார்.

## புலோலித் தமிழ் இளைஞர் கழகம்

யாழ்ப்பாணம்: 13-8-44-ல் மேற்படி கழகம் ஒன்று நிறுவப்பட்டது. தமிழ் வளர்ச்சி, தமிழர் முற்போக்கு, மூடப்பழக்கவழக்க ஒழிப்பு, திராவிடர்களைத் தட்டியெழுப்புதல் இச்சங்கத்தின் நோக்கம். வழக்கறிஞர் தோழர் செ. தருமகுலசிங்கம் அவர்கள் தலைமையில் புலோலி எம். எம். பள்ளியில் நடைபெற்ற இக்கழகக் கூட்டத்தில், தோழர்கள் ஜி. எம். ஆழ்வாப் பிள்ளை, பண்டிதர் க. வீரகத்திப் பிள்ளை, பண்டிதர் த. கிருஷ்ணன் முதலியவர்கள் பல பொருள் பற்றி பேசினார்கள். பின் நிர்வாகஸ்தர்கள் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

## நாஞ்சிநாடு திராவிடத் தொண்டர் படை

மேற்படி தொண்டர் படையினர் 17-1-1120ல் நாகர்கோவிலிலிருந்து புறப்பட்டு கண்ணம்புதூர், ஆரல்வாய்மொழி, கன்னியாகுமரி, பஞ்சலிங்கபுரம், இரவிபுதூர், கொறண்டி, ஒயாவிளை முதலிய ஊர்களுக்குச் சென்று சொற்பொழிவாற்றுவார்கள்.

## இறுதிச்சடங்கு

செங்கம் தாலூகா தண்டராம்பட்டு கிராமத்திலிருக்கும் பிரபல மிராசுதார் தோழர் சித்தா ரெட்டியார் அவர்களின் தந்தை பாலகுருவா ரெட்டியார் தமது 82வது வயதில் இயற்கை யெய்தியதை முன்னிட்டு 13-8-44 ஞாயிற்றுக்கிழமை இறுதிச்சடங்கு பார்ப்பனப் புரோகிதமின்றி நடத்தப்பட்டது. தோழர் எஸ். காந்திமதிநாதன் அவர்கள் தலைமையில் நடந்த கூட்டத்தில் தோழர்கள் எம். பி. ரங்கசாமி ரெட்டியார், ஆர். எஸ். நடேச முதலியார், ராமதேவ ரெட்டியார் முதலானவர்கள் "சமூக சீர்திருத்தமும் புரோகித ஒழிப்பும்" என்பதுபற்றிப் பேசினார்கள். சித்தா ரெட்டியார் வந்தனோபசாரம் கூறினார். 'குடி அரசு' 'திராவிடநாடு' பத்திரிகைகளின் வளர்ச்சிக்காக ரூபாய் ஐந்து நன்கொடை அளிக்கப்பட்டது


## "குடி அரசு" பதிப்பக வெளியீடுகள்

### 2 அணா புத்தகங்கள்

இனிவரும் உலகம்
ஈ. வெ. ரா. சீர்திருத்த மகாநாட்டு உபந்யாசம்
பெரியார் திருச்சி பிரசங்கம்
இராமலிங்க சுவாமிகள் பாடல்திரட்டு
நரகம் எங்கே?
ஈ. வெ. ரா. இலங்கை உபந்யாசம்
இங்கர்சாலின் ஜீவிய சரித்திரம்
மதம் என்றால் என்ன?
இந்தி எதிர்ப்புப் பாடல்கள்
கார்ல்மார்க்ஸ்
சோஷியலிசம்
அகத்தியர் ஆராய்ச்சி
சமதர்ம உபந்யாசம்
பஞ்சமா பாதகங்கள் (அய்யாமுத்து)
தமிழ்நாடு தமிழருக்கே
கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

| | |
|---|---|
| தமிழர் தலைவர் | 1—0—0 |
| பாரதிதாஸன் கவிதைகள் | 1–8–0 |
| அறிவின் எல்லை (பெரியாரின் எழுத்தும் பேச்சும் என்ற பத்து புத்தகங்கள் கொண்ட பயின்டு வால்யூம் | 1–4–0 |
| திராவிடர் ஆரியர் உண்மை | 0 0 6 |
| இந்திப்புரட்டு | 0 0 6 |
| தமிழ் இசை நடிப்பு கலைகள் | 0–1–0 |
| காந்தி கண்டனக் கீதம் | 0–1–0 |
| சமதர்மக் கீதங்கள் | 0–0–6 |

கிடைக்குமிடம்:—
குடி அரசு பதிப்பகம், ஈரோடு.


Printed and Published by N. [illegible]varadaswamy at the [illegible] [illegible] Press 32, Cutchery Street, Erode.